GOKULAM

கோகுலம்

அக்டோபர் 2004
ரூ.6/-



உயிர்களிடத்தில் அன்பு வேணும்...


SEMAS
SEMAS
Academy of Excellence
Japanese - Mental Arithmetic
Soroban Kids
Soroban Flash
Mastering Soroban
Senior Soroban
Join in SEMAS
This year 10 students are selected to fly
Taiwan
International Competition on 25th Dec. 2004 at Taiwan
Organizing by Taiwan Chamber of Commerce
ISO 9001 : 2000 Certified
ISO-9001:2000
Certified
BEWARE
SEMAS only offering
Japanese Abacus &
Mental Arithmetic Edun. in India
This is a legal information for PUBLIC awareness
SEMAS Unique in Abacus Education. How?
Advance and Entire concept of Abacus education and
its Brain development Techniques as it is in Japan!
Unique syllabus for all age groups from 3 years old onwards!
Unique syllabus to teach all the Arithmetic sums
with in 3-months of practice!
Highly structured syllabus, even Master Level finished students
from other institutions also can Join to continue further!!
SEMAS solicits GLOBAL franchisee
SEMAS
Corporate Office SEMAS Pvt. Ltd.
545, 14th Street, 4th Sector, K.K. Nagar, Chennai - 600 078.
Ph. : 24722550, 24722505, Fax : 24801083
www.semasindia.com Email : info@semasindia.com
www.semasacademy.com

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்


தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621


மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்






அக்டோபர் 2004 மலர் : 22 இதழ் : 9

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

நாய்களுக்கு


மிக்ஸர் பிட்ஸ்



கோடு... கோடு என்று முடியும் ஊர்ப் பெயர்கள் நிறைய உள்ள மாவட்டம் குமரி மாவட்டம். குமரி மாவட்டத்தில் மட்டும் 'கோடு' என்று முடியும் ஊர்கள் 64 உள்ளன. கோடு போட்ட குமரி மாவட்டம் என்று புகழ்ந்து சொல்லலாம்.


பாங்க் என்றாலே மனிதர்கள் கணக்கு வைத்துக் கொள்ளும் இடம் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கும் கணக்கு தொடங்க அனுமதியளித்துள்ளது ஜப்பான் நாடு. சன்வா பாங்க் இந்த வசதி செய்து கொடுத்துள்ளது.

- லலிதா செல்லப்பா, சென்னை



உலகின் தலை சிறந்த பரிசென மதிக்கப்படும் நோபல் பரிசினை இதுவரை மூன்று முறை பெற்ற தனி மனிதர் எவரும் இல்லை. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மட்டுமே மூன்று முறை இப் பரிசினைப் பெற்றுள்ளது.

- ஆர். ஆர். பூபதி, கன்னிவாடி



'பிளாடர் வார்ப்' என்னும் நீர் வாழ் தாவரத்தின் வேரில் சிறு சிறு பைகள் உள்ளன. நீரில் ஊர்ந்து செல்லும் உயிரினங்கள், மீன் போன்றவை அந்த வேரின் பையைத் தொட்டவுடன் அவற்றை உள்ளிழுத்துக் கொண்டு 'பை' மூடிக் கொள்கிறது. செடியில் சுரக்கும் அமிலங்கள் பையிலிருக்கும் உயிரினத்தை முழுமையாக செரித்த பின்பே 'பை' மீண்டும் திறக்கிறது.

- மு. சுகன்யா, ஒன்பதாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்

ஒரு துளி ரத்தம் மனித உடலைச்

ஒரு வங்கி!




சுற்றி வர எடுத்துக் கொள்ளும் நேரம் 2 விநாடிகளாகும்.

- ஆர்.எஸ். பிரகாசம், உய்யகொண்டான் திருமலை, திருச்சி

உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.

உலகிலேயே மிகக் குறைந்த வார்த்தைகள் கொண்ட மொழி இத்தாலியன் மொழி.

- எஸ். திலகவதி, வில்லியனூர்




சாதாரண வானவில்கள் ஒருசில நிமிட நேரம் நீடிப்பது வழக்கம். ஆனால் 14.8.1979 அன்று இங்கிலாந்தில் வேல்ஸ் பகுதியில் கிளைப் என்ற இடத்தில் காட்சியளித்த வானவில் 3 மணி நேரம் நீடித்தது. உலக வரலாற்றில் இதுதான் மிக அதிக நேரம் நீடித்த வானவில்!

- பி. கமல்நாத், நாமகிரிப்பேட்டை



அன்னாசிப் பழம் என்பது ஒரு பழமே அல்ல. பல புஷ்பங்கள் ஒன்றாகச் சேர்ந்த செண்டு தான் அது. தலைப் பகுதியில் காணப்படும் சிறு இலைக் கொத்தை வெட்டி நட்டுதான் அன்னாசிச் செடிகள் பயிரிடப்படுகின்றன. இச் செடி பூக்கிறதே தவிர பழம் தருவது இல்லை. அதனால் இதற்கு விதையும் கிடையாது.

- மு. ஹரிதாஸ், கும்பகோணம்



மனிதனுக்கு வாசனை கண்டறிவதற் காக மூக்கில் உணர்வு வாங்கிகள் உள்ளன. இவற்றில் மனிதனுக்கு ஏறத்தாழ 60 மில்லியன் உணர்வு செல்கள் உள்ளன. ஆனால் நாய்க்கு ஏறத்தாழ 250 மில்லியன் உணர்வு செல்கள் உள்ளன. இதனால் நாய்க்கு மோப்ப சக்தியானது மனிதனை விட மிகவும் அதிகமாக உள்ளது. எனவே நாய் நன்றாக வாசனை மூலம் எந்தப் பொருளையும் உணருகிறது.

- இரா. பாலு, வரக்கால்பட்டு





ஆளைப் பார்த்து

சிங்கம் கூப்பிடுவதாக நரி வந்து சொன்னதும் - யானையும் குரங்கும் புறப்பட்டன.

சிங்கத்தின் வீட்டை அடைந்தபோது, அது வாசலிலேயே நின்று கொண்டிருந்தது.

யானையைப் பார்த்து, "நீ தென்னை மரங்களில் உள்ள முற்றிய தேங்காய்களைப் பறித்து குவித்து வைத்துவிட்டு வா" என்றது, சிங்கம்.

அதைக் கேட்ட யானை, "நான்..." என்று ஏதோ சொல்ல வந்தது. ஆனால், யானையைச் சொல்லவிடவில்லை சிங்கம்.

"எதுவும் சொல்ல வேண்டாம். உடனே போய் நான் சொன்னதைச் செய்துவிட்டு வா" என்று அதட்டியது.

"சரி" என்று சொல்லிவிட்டு, சிங்கத்துக்குச் சொந்தமான தென்னந்தோப்பை நோக்கி நடந்தது யானை.

அடுத்து நின்ற குரங்கைப் பார்த்த சிங்கம், "நீ பக்கத்தில் உள்ள தேக்குத் தோப்பில் ஆங்காங்கே துண்டு செய்து போடப்பட்டிருக்கும் தேக்கு மரத் துண்டுகளைத் தூக்கிக் கொண்டு வந்து, தோப்பின் மத்தியில் அடுக்கி வை" என்றது.

சிங்கம் சொன்னதைக் கேட்ட குரங்கும் ஏதோ சொல்ல வந்தது.

ஆனால் சிங்கம், அதைச் சொல்ல விடவில்லை.

"என்ன?... போய்ச் செய்கிறாயா... இல்லையா?" - சிங்கம் சினத்துடன் குரங்கைப் பார்த்து கர்ஜித்தது.

மாலை - மணி நான்கு.


வேலைக்குச் சென்ற யானையும் குரங்கும் திரும்பவில்லை.

எதிர்பார்த்து காத்திருந்த சிங்கத்திற்கும் அலுத்துப் போய்விட்டது.

போய்ப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டது சிங்கம்.

வழியில் -

ஒரு பாறையின் மேல் உட்கார்ந்து, அந்த மாலை நேர நீல வானத்தின் அழகைப் பார்த்துக்



கொண்டிருந்தது நரி.

நரியைப் பார்த்த சிங்கம், "சின்னப் பையா! தோப்பு வரையிலும் போய் வருவோம் வா" என்று அழைத்தது.

வேலை கொடு

புலேந்திரன்



''இதோ வருகிறேன்'' என்று நரி எழுந்து ஓடி வந்தது.

சிங்கமும், நரியும் தென்னந்தோப்பை அடைந்தபோது -

யானை, சில பாறைக் கற்களை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைத்து அதன்மீது ஏறி நின்று கொண்டு, ஒரு தென்னை மரத்தில் இருந்த தேங்காயைப் பறித்திட முயன்று கொண்டிருந்தது.

கற்களின் மீது நின்று ஒரு தேங்காயைப் பறித்திட யானை எம்பும்போது கல் நொடித்து, தடுமாறி விழுவதும் கீழே விழுந்த யானை எழுந்து மீண்டும் அம் மாதிரியே துதிக்கையை உயர்த்தி, தேங் காயைப் பறித்திட முயலுவதுமாக இருந்தது.

அதுவரையிலும் ஒரு தேங்காய்கூட பறித்திருக்கவில்லை.

இருவரும் அடுத்து இருந்த தேக்குத் தோப்பைப் பார்த்தபோது -

ஒரு பெரிய தேக்குக் கட்டையைக் காட்டுக் கொடிகளால் கட்டி இழுத்துக் கொண்டிருந்தது குரங்கு.

தோப்பில், ஆங்காங்கே கிடந்த மரங்கள் அப்படி அப்படியே கிடந்தன.

''குரங்குக்கு இந்த வேலையைக் கொடுத்ததும் நீங்கள்தானா?...'' - நரி.

''ஆமாம்'' என்றது, சிங்கம்.

நரி, சிரித்தது.

''அந்த இரண்டு பேருமே கொடுத்த வேலையைச் சரியாகச் செய்யாதது தப்பு. அதற்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்பதையும் நீயே சொல்'' என்றது சிங்கம்.

''தண்டனையை நாளைக்கு வழங் கலாம்...'' என்ற நரி, யானையையும் குரங்கையும் கூப்பிட்டு,

''நீங்கள் வீட்டுக்குப் போங்கள். நாளை காலை பத்து மணிக்கு வந்துவிடுங்கள்'' என்றது.

மறுநாள் -

யானையும் குரங்கும் சரியாக காலை பத்து மணிக்கு வந்துவிட்டன.

வெளியில் நின்ற நரி, உள்ளே அமர்ந்திருந்த சிங்கத்தைப் பார்த்து, ''நீங்கள் அங்கேயே இருங்கள். அவர் களுக்கு வேலையை நான் சொல்லி அனுப்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு,

யானையையும் குரங்கையும் அருகில் அழைத்து, அவர்களுக்கு அன்றைய வேலையைச் சொல்லி அனுப்பியது.

மணி - பதினொன்று.

''வாருங்கள்.... வேலை எந்த அளவுக்கு நடந்திருக்கிறது என்று பார்த்து வரலாம்'' என்று சிங்கத்தை அழைத்தது, நரி.

இருவரும் தோப்பை அடைந்தபோது அனைத்து தென்னை மரங்களிலும் இருந்த முற்றிய தேங்காய்கள் பறித்து, தோப்பின் நடுவில் குவிக்கப்பட்டிருந்தன. கடைசித் தேங்காயைக் குவியலில் வைத்துவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தது குரங்கு. அடுத்து இருந்த தேக்குத் தோப்பில் பல இடங்களில் கிடந்த மரங்கள் தோப்பின் மத்தியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கடைசி மரத்தைத் தூக்கி அடுக்கில் வைத்துக் கொண்டிருந் தது யானை.

சிங்கத்திற்கு வியப்பு தாளவில்லை.

''நேற்று ஆறு மணி நேரத்தில் செய்ய முடியாததை இன்று ஒரு மணி நேரத்தில் செய்து முடித்துவிட்டார்களே... எப்படி?'' நரியைப் பார்த்துக் கேட்டது சிங்கம்.

அதற்கு முயல், ''யானை மிகுந்த பல முள்ளது. பெரிய மரங்களைக் கூட எளி தாகத் தூக்கிவிடும். ஆனால், தென்னை மரத்தில் ஏற முடியாது. குரங்கினால் பெரிய மரத்துண்டுகளைத் தூக்க முடியாது. ஆனால், தென்னை மரத்தில் ஏறச் சொன் னால் நொடியில் உச்சிக்குப் போய்விடும்'' என்றது.

''அப்படியானால்?''

''வேலைக்கு அமர்த்தப்படும் ஆளின் தகுதியை அறிந்து, அதற்கு ஏற்றார்போல் பொறுப்பை ஒப்படைப்பவர்தான் சிறந்த நிர்வாகி'' என்றது நரி.

தனது தவறை உணர்ந்தது சிங்கம். ●

பொள்ளாச்சி பள்ளி ஸ்பெஷல்



நவம்பர் கோகுலம் பொள்ளாச்சியில் உள்ள மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மகாலிங்கபுரம் ஸ்பெஷலாக வெளிவருகிறது.

ஜோக்ஸ் கார்னர்


பாம்பு படம் எடுத்தால் என்ன செய்வது?

"உன் முன்னால பாம்பு படம் எடுத்தா நீ என்ன செய்வே?"

"சிரிச்ச மாதிரி போஸ் குடுப்பேன்"

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்






"அவர் சிமெண்ட், மணல் எல்லாம் எடுத்துக்கிட்டு எங்கே போறார்..?"

"இடிஞ்சு போன அவரோட மனக் 'கோட்டை'யைச் சரிசெய்யப் போறாராம்...!"

- ஆர். பிரசன்னா, கரூர்

"புலி சிங்கத்தைப் பார்த்தால், தலைதெறிக்க ஓடுறாரே... ஏன்?"

"அவர் பெரிய பக்தி 'மான்' ஆச்சே...!"



"படுக்கும்போது சர்க்கரை டப்பாவை உங்க கால்மாட்டுல வெச்சுக்கறீங்களே. எதுக்காக அப்படி செய்யறீங்க...?"

"எனக்கு சர்க்கரை வியாதி இருக்கறதாலே சர்க்கரை பக்கம் தலைவெச்சுப் படுக்கக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரே...!"

- ஆர். ராஜலட்சுமி, கரூர்

ராமு : நம்ம குப்புலிங்கம் விளையாட்டு போட்டியில் நிறைய கப் பரிசு வாங்கியவுடன் பெயரை மாற்றிக் கொண்டான்.


சோமு : அப்படி என்ன பெயர்?

ராமு : கப்புலிங்கம்.

- ஆரூர் பால செல்வக்குமார், திருவாரூர்







எரிபொருள் சாம்பியன்!

இரண்டு பேரிலிருந்து நான்கு பேர் வரை விளையாடலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிற பட்டன்கள். தாயக்கட்டை அல்லது சோழி போட்டு விளையாடுங்கள். தாயம் போட்டு ஆரம்பியுங்கள்.

அடுத்த இதழில்...



உங்கள் பெற்றோர்களை
மகிழ்வித்த

வாண்டுமாமா




புத்தம் புதிய
சித்திரத் தொடர்கதையுடன்
உங்களை மகிழ்விக்க வருகிறார்!

அம்மாவைத் தேடி...

படம் : மகேஷ்

இப்பொழுதே உங்கள் பிரதிக்கு ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள்.



கவர் ஸ்டோரி

உயிர்களிடத்தில் அன்பு வேணும்...



காட்டுப் பிராணிகள், நாட்டுப் பிராணிகள் அது எந்த உயிரினமாக இருந்தாலும் சரி, உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும்.

அந்தக் காலத்தில் வாசலில் கோலம் போடும்போதுகூட கோலப் பொடியைப் பயன்படுத்தாமல் அரிசி மாவால் கோலம் போடுவார்கள். அந்த அரிசி மாவை எறும்புகள், பறவைகள் போன்ற உயிரினங்கள் சாப்பிட்டுப் பசியாறும்.

காட்டு மிருங்களைப் பார்த்து நாம் பயந்த காலம் போய் இன்று நம்மைப் பார்த்து அவை பயப்படும் நிலை உருவாகிவிட்டது. மனிதன் தன் சுயநலத்துக்காக காடுகளையும் மலைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக தன் வசமாக்கி வருகிறான். பிராணிகளை வேட்டையாடி வந்ததால் இன்று பெரும்பான்மையான பிராணிகள் எண்ணிக்கையில் குறைந்து அழிந்து வரக் கூடிய உயிரினங்கள் பட்டியலில் சேர்ந்துவிட்டன.

காட்டு விலங்குகளின் நிலை இப்படியிருக்க... நாட்டில் வசிக்கக் கூடிய சில விலங்குகள் மனிதனுக்கு அடிமையாகி, உழைத்து உழைத்தே காலத்தைக் கழிக்கின்றன.

நாய், பூனை போன்ற சில விலங்குகள் மனிதனின் செல்லப் பிராணிகளாகிவிட்டன. மேலை நாடுகளில் செல்லப் பிராணிகளை அதிகம் விரும்பி வளர்க்கின்றனர். ஆஸ்திரேலியாவில் மட்டும் 67% மக்கள் செல்லப் பிராணிகளை வளர்த்து வருகின்றனர்.


அக்டோபர் 4ந் தேதி உலக பிராணிகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் ஒரே இடத்தில் கூடி பிராணிகள் பற்றிய விழிப்புணர்வை விளையாட்டுகள், திரைப்படங்கள் மூலம் மக்களுக்கு எடுத்துரைக்கின்றனர்.

அழகான பிராணி, குறும்பு செய்யும் பிராணி, மென்மையான பிராணி, கொடிய பிராணிகள் என வித்தியாசம் பார்க்காமல் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். அன்பு செலுத்துதல் என்ற அற்புதமான விஷயத்தைக் கையாள மனிதர்களால் மட்டுமே முடியும்.

நாம் வாழும் பூமி நமக்கு மட்டுமின்றி நம்மைப் போன்ற எல்லா உயிரினங்களுக்கும் சொந்தமானது.

அட்டையில் : அபிநயா
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

கோகுலம் சுழல் கோப்பை



பெருமை மிகு கோகுலம் சுழல் கோப்பையை இந்த ஆண்டு பெறப் போகும் பள்ளி எது? இன்னும் இரண்டே மாதங்களில் ரிசல்ட் தெரிந்து விடும். கைதட்ட காத்திருங்கள்!

வயிற்று வலியும் படையெடுப்பும்...

கதை : வீ. வீரப்பன், பிரிட்ஸ் பள்ளி, சின்னநாச்சியூர், சேலம் படம் : பிள்ளை




வெள்ளி வென்ற ரத்தோர்!



* ரத்தோர்

விளையாட்டு உலகம்



* ராகுல் டிராவிட்



* குஸ்னெட்சோவா



* இர்பான் பதான்

ஒலிம்பிக்ஸ்

ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமாக நடந்து முடிந்துள்ளன. இதில் அமெரிக்கா 103 பதக்கங்கள் பெற்று முதல் இடத்தில் உள்ளது. 63 பதக்கங்கள் பெற்று சீனா இரண்டாவது இடத்திலும், ரஷ்யா 92 பதக்கங்கள் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இந்தியாவிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் ஒலிம்பிக்ஸில் பங்கேற்றனர். 100 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவுக்கு கிடைத்த பதக்கமோ ஒரே ஒரு வெள்ளி மட்டுமே!

ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று இந்தியாவைப் பதக்கப் பட்டியலில் சேர்த்திருக்கிறார். இந்திய ராணுவத்தில் மேஜராகப் பணிபுரிந்து வருகிறார் ரத்தோர்.

கிரிக்கெட்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) ஆண்டின் சிறந்த வீரர்களுக்கான விருதுகளை அறிவித்துள்ளது. சிறந்த வீரர் மற்றும் டெஸ்ட் போட்டி வீரர் விருதுகளை இந்திய கிரிக்கெட் அணியின் துணை கேப்டன் ராகுல் திராவிட் பெற்றுள்ளார். அதேபோல் சிறந்த வளர்ந்து வரும் வீரர் விருதை இர்பான் பதான் வென்றுள்ளார். சிறந்த ஒரு தினப் போட்டி வீரர் விருதை இங்கிலாந்தின் ஆண்ட்ரூ பிளின்டாப் வென்றார்.

யு.எஸ்.ஓபன்

டென்னிஸ் உலகில் மகளிர் பிரிவில் ரஷ்யர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். விம்பிள்டன் பட்டத்தை மரியா ஷரபோவா வென்றதைத் தொடர்ந்து யு.எஸ். ஓபனிலும் ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா குஸ்னெட்சோவா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். இறுதிப் போட்டியில் சக நாட்டு வீராங்கனை டெமன்டீவாவுடன் குஸ்னெட்சோவா மோதினார். 6 - 3, 7 - 5 என்ற நேர் செட்களில் 19 வயதான குஸ்னெட் சோவா தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார்.

யு.எஸ். ஓபன் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை ரோஜர் பெடரர் வென்றார்.



கல்லக்குடி
சரஸ்வதி வித்யாலயம்
துவக்கப் பள்ளி
ஸ்பெஷல்

தன்னம்பிக்கையூட்டும் பள்ளி!

1994ம் ஆண்டு சுமார் 100 மாணவர்களுடனும் ஏழு ஆசிரியைகளுடனும் ஒரே ஒரு கட்டடத்துடன் தொடங்கப்பட்டது இப்பள்ளி. ஆரோக்கியமாக வளர்ந்து இன்று சுமார் 350 மாணவர்களுடனும் பதினைந்து ஆசிரியைகளுடனும் மூன்று உறுதிமிக்கக் கட்டடங்களுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாணவச் செல்வங்களுக்குத் தேவையான அத்யாவசிய வசதிகளும் விளையாட்டிட வசதியும் விளையாட்டு உபகரணங்களும் தாராளமாக செய்து தரப்பட்டுள்ளன. 1996ம் ஆண்டு முதல் அரசு அங்கீகாரம் பெறப்பட்டது. நமது மாணவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக மிளிர வேண்டும் என்பதை உணர்ந்து முறையான பாடத் திட்டங்களுடன் கூடுதலாக கணினி, தன்னம்பிக்கையூட்டும் தற்காப்பு கலைகள் மற்றும் இந்தி ஆகியவை விருப்பப் பாடங்களாக பயிற்றுவிக்கப்படுகின்றன. இப்பள்ளியின் நிறுவனர் என். ராஜேந்திரன் அவர்களும், தலைமை ஆசிரியை ஆர். தமிழ்ச் செல்வி அவர்களும் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர்.


தோகை விரித்தாடு

அகவும் மயிலே அகவும் மயிலே
அழகிய தோகை விரித்தாடு
இங்கே அங்கே அலையாதே
அருகில் வந்து நடமாடு

தலையில் கொண்டை போட்டது யார்?
தாயார் தானே சொல் மயிலே
இத்தனை பொட்டுகள் வைத்தது யார்?
என்னிடம் சொல்வாய் மயிலே

குமரக் கடவுள் வாகனமே
கொஞ்சிப் பழக வருவாய் நீ
குயிலைப் பாடச் சொல்லுகிறேன்
கொஞ்சம் ஆடிச் செல்வாய் நீ...

- எம். லாவண்யா,
இரண்டாம் வகுப்பு





கீதையின் பார்வையில் மனித வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால்-அதை எதிர் கொள்!
வாழ்க்கை ஒரு கொடை
-அதை ஏற்று ஒப்புக்கொள்!
வாழ்க்கை ஒரு சாகசம்
-அதை துணிந்து நிறைவேற்று!
வாழ்க்கை ஒரு விளையாட்டு
- அதை விளையாடி வெற்றி கொள்!
வாழ்க்கை ஒரு கவிதை
- அதை பாடி ஆனந்தப்படு!

- ஆர்.எம்.மதுசூதனன், ஐந்தாம் வகுப்பு,

எண்ணங்கள்

பத்து ஒற்றை இலக்கங்களைக் கீழ்கண்டவாறு இரு வரிசைகளாகப் பிரித்தோம்.

1 4 7
0 2 3 5 6 8 9

இந்த வரிசைகளில் ஏதோ ஒரு விதி கடைபிடிக்கப்பட்டுள்ளது. அது என்ன? என்று கணித ஆசிரியரிடம் காண்பித்த போது 'ஏன் இது சாதாரணம்தானே' என்றார். இதையே வரலாற்று ஆசிரியரிடம் காண்பித்தபோது, சட்டென்று 'எனக்குப் புரிந்துவிட்டது' என்றார். ஆனால் இரு ஆசிரியர்களும் வெவ்வேறு வகைகளில் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் என்ன புரிந்து கொண்டிருப்பார்கள்?

கணித ஆசிரியர் கூறியதாவது :

4 மற்றும் 7 மூன்றால் வகுபடும்போது மீதி 1 வரும் என்றார்.

வரலாற்று ஆசிரியர் கூறியதாவது :

1, 4 மற்றும் 7 எண்கள் அனைத்தும் நேர்க்கோடுகளால் ஆனவை. (1, 4, 7). ஆனால், கீழ்வரிசையில் உள்ள எண்கள் வளையங்களால் (0, 2, 3, 5, 6, 8, 9) ஆனவை என்றார்.

- ஆர். ப்ரீத்தி,
இரண்டாம் வகுப்பு

விடுகதை

1. பறவையில் இருக்கும். பறக்க உதவும். மென்மையாய் இருக்கும். மினுமினுப்பாய்த் தோன்றும் - அது என்ன?

2. வெள்ளை வெளேரென்று இருக்கும். பனிக்கட்டியும் அல்ல. நூல் எடுக்க உதவும். அது நூலகமும் அல்ல - அது என்ன?

3. செய்வதைச் செய்யும் குரங்கும் அல்ல. சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல - அது என்ன?

- மு.ப்ரியதர்ஷினி, நான்காம் வகுப்பு


4. பார்த்தால் படிகக்கல். கடித்தால் வெகு சுவை - அது என்ன?

5.தாத்தா கையில் கைத்தடி, அதைக் கடித்தால் இனிக்கும்-அது என்ன?

6. நடுக்காட்டில் நான்கு பேர். நனையாமல் வருகின்றனர்-அது என்ன?

- எஸ். கிஷோர்குமார்,
ஐந்தாம் வகுப்பு

விடை : 1. இறகு 2. பஞ்சு 3. கண்ணாடி 4. கற்கண்டு 5. கரும்பு 6.மாட்டுக்காம்பு



கல்லக்குடி சரஸ்வதி வித்யாலயம் துவக்கப் பள்ளி ஸ்பெஷல்



மாயச் சதுரம்

எளிமையான முறையில் 4 x 4 மாயச்சதுரம் அமைப்போமா? எண்களில் தாவி எண்ணும் முறையில் நான்கு நான்கு எண்களாக எழுதுங்கள்.

10	12	14	16
18	20	22	24
26	28	30	32
34	36	38	40

கோடுகளின் இரு முனைகளில் உள்ள எண்களை இடம் மாற்றி எழுதுங்கள். இப்பொழுது கிடைக்கும் எண் வரிசையைக் கவனியுங்கள்.

10	38	36	16
32	20	22	26
24	28	30	18
34	14	12	40

இப்போது ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் உள்ள எண்களைக் கூட்டிப் பாருங்கள். எல்லாவற்றிலும் கூட்டுத் தொகை 100 என வருகிறதல்லவா?

- ப்ளெசிங் பிரின்சி, இரண்டாம் வகுப்பு

தத்துவம்

நதி என்றால் கரை உண்டு
பூமி என்றால் தரை உண்டு
நீர் என்றால் நுரை உண்டு
மனிதன் என்றால் குறைகள் உண்டு

- என்.கோகிலவாணி, மூன்றாம் வகுப்பு

பொது அறிவு

1. அடிபட்டால் மனிதனைப்போல அழும் விலங்கு கரடி.
2. ஈக்களுக்குப் பற்கள் இல்லை.
3. இரண்டு தேசிய கீதங்களைக் கொண்ட நாடு ஆஸ்திரேலியா.
4. எந்த ஒரு கனவும் 20 நிமிடங்களைத் தாண்டாது.
5. நமது நாட்டைப் போன்று எகிப்து நாட்டின் தேசிய மலரும் தாமரைதான்.

- ப.தீபலக்ஷ்மி, இரண்டாம் வகுப்பு




கல்லக்குடி சரஸ்வதி வித்யாலயம் துவக்கப் பள்ளி ஸ்பெஷல்



எஸ்.சஹானா




பி. விக்னேஷ் கரண்,
முதலாம் வகுப்பு



எம்.பிரியதர்ஷினி,
நான்காம் வகுப்பு



பி.சரவணன்,
நான்காம் வகுப்பு



எஸ்.ஹரிகிருஷ்ணன்,
ஐந்தாம் வகுப்பு



பி.நித்யா தேவி,
ஐந்தாம் வகுப்பு



எம்.அட்க்ஷயகுமார்,
மூன்றாம் வகுப்பு



ஆர்.அரவிந்த்,
யூ.கே.ஜி



எம்.கீர்த்திகா,
ஐந்தாம் வகுப்பு




என்.அரவிந்த்,
நான்காம் வகுப்பு

அழகிய அணிலே!

ஆழி

அணில், கொறிக்கும் பிராணிகள் இனத்தைச் சேர்ந்தது. அணில், மரக்கிளைகளில், பொந்துகளில் புல், வைக்கோல், நார், பஞ்சு இவற்றுடன் தன் வால் உரோமங் களையும் சேர்த்து மென்மையான கூடு கட்டும். அதில் 3 அல்லது 4 குட்டிகள் ஈனும். தன்குட்டிகளைப் பால் ஊட்டி வளர்க்கும்

அணில்களில் பல வகைகள் இருக்கின்றன.



அணில் இனங்களில் மிகவும் பெரியது 'ராட்சச அணில்'! இது ஒரு பெரிய முயல் அளவில் இருக்கும்!






அணில்களில் மிகவும் சிறியது 'பறக்கும் பிக்மி அணில்'. எடை சுமார் 14 கிராம். மரங்களின் உச்சியில் மட்டுமே வாழும். நிலத்தில் இறங்குவதே யில்லை! இதன் இரை பூக்களில் உள்ள தேனும் சிறு பூச்சிகளும். கங்காருவைப் போல் இதற்கும் வயிற்றில் பை உண்டு. ஆனால், பையில் குட்டியைச் சுமந்து செல்வது இல்லை.


பறக்கும் அணிலுக்கு இறக்கைகள் இல்லை. ஆனால், முன் கால்களிலும் பின் கால்களிலும், பக்கப் புறமாக மெல்லிய தோல் இணைந்திருக்கிறது. நான்கு கால்களையும் அகலப் பரப்பித் தோலை விரித்து, இந்த அணில் சுமார் 65 மீட்டர் தூரம் காற்றில் மிதப்பது போல், ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிச் செல்லும்! இந்த அணில்கள் கேரளாவில் அதிகம்.

அணிலுக்கு மோப்ப சக்தி அதிகம். அது தேங்காய், இளநீராக இருக்கும் போது ஓட்டை போட்டு, நீரைக் குடித்துவிடும். பனங்காய்களையும் ஓட்டை போட்டு நுங்கைத் தின்றுவிடும்!







அணில் மரத்துக்கு மரம் தாவும்போதும், நடக்கும் போதும், அதன் வால் அதன் உடலைச் சமநிலைப் படுத்துகிறது. அணில் உயரமான இடத்திலிருந்து குதிக்கும்போது 'பாராசூட்' போல மெதுவாக வரவும் வால் உதவுகிறது. இதனால் அணில் 20 மீட்டர் உயரத்திலிருந்து கீழே குதித்தாலும் அதற்கு அடி ஏதும் படுவதில்லை! அணில் வால் உரோமங்கள் ஓவியர்களின் பிரஷ் செய்யப் பயன்படுகின்றன.



ஆசிய அணில்களுக்கு உடலில் 3 கோடுகள் உண்டு. ஆனால், சில அணில்களுக்கு 13 கோடுகள் இருக்கின்றன!




அணில்கள் உலர்ந்த கொட்டைகளையும் விதைகளையும் பூமிக்குள் புதைத்து வைப்பதுடன், அந்த இடத்தில் அடையாளமாக சிறுகல்லையோ குச்சியையோ வைக்கின்றன. இரை கிடைக்காத காலத்தில் அந்த இடத்திற்குச் சென்று, புதைத்து வைத்த பொருள்களைத் தோண்டி எடுத்துத் தின்கின்றன!



அலாஸ்காவில் உள்ள 'நில அணில்', வருடத்தில் 9 மாதங்கள் இரவும் பகலும் தொடர்ந்து தூக்கத்தில் ஆழ்ந்து விடும். அது வெளி உலகில் வாழும் காலம் 3 மாதங்களே!



அணில் எப்போதும் எதையாவது கொறித்துக்கொண்டேயிருக்கும். அல்லது மேலும் கீழும் உள்ள முன்பற்களை உராய்ந்து தேய்த்துக் கொண்டே இருக்கும். அப்படி செய்யாவிட்டால், அந்தப் பற்கள் அதன் வாலைவிட நீளமாக வளர்ந்து விடக் கூடும்!



மேஜிக்

பூபதி ராஜாவுக்கு மூன்று பிள்ளைகள். ராஜா மிகவும் நல்லவராகவும் வல்லவராகவும் இருந்தார். துரதிர்ஷ்டவசமாக ஒருநாள் அவர் நோய்வாய்பட்டு படுக்கையில் விழுந்தார். மருத்துவர்கள் பலரும் வந்து அவரைச் சோதித்தனர். குணமாகவில்லை. நோயும் நாளுக்கு நாள் தீவிரமானது. தூர தேசத்திலிருந்து மருத்துவர் ஒருவர் ராஜாவை சோதித்து வெகுதூரத்தில் இருக்கும் மேஜிக் ஊற்றிலிருந்து நீரை எடுத்து வந்து ராஜாவிற்கு கொடுத்தால் நோய் தீரும் என்றார். மூன்று பிள்ளைகளும் மருத்துவரை மேஜிக் ஊற்று எங்கே உள்ளது என்று கேட்க, ''அதை நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றார்.

முதல் பிள்ளை 'மேஜிக் ஊற்றிலிருந்து நீர் கொண்டு வந்தால் அப்பா குணமடைவார். முழு ராஜ்யமும் எனக்கு மகிழ்ந்து கொடுத்து விடுவார்' என்று எண்ணி அதைத் தேடிப் போனான். கிழக்குப் பக்கமாகச் சென்றபோது காடு தென்பட்டது. வழியில் குள்ளன் ஒருவனைக் கண்டான். நடுவழியில் நின்று கொண்டிருந்த குள்ளனிடம் அவன் கோபம் கொண்டான். ''நீ எங்கே செல்கிறாய்?'' என்று குள்ளன் கேட்டதும், ''அதைக் கேட்க நீ யார்? வழியை விடு...'' என்றபடி இளவரசன் சென்றான். குள்ளன் இவனுடைய குணம் கண்டு கோபம் கொண்டான். இளவரசன் சென்று கொண்டிருந்தபோது அவனைச் சுற்றி மரங்கள் சூழ்ந்திருப்பதையும் நீர், ஆகாரம் எதுவுமின்றி தவிக்க நேரிட்டதும், 'அடடா நான் குள்ளனைக் கோபமாகப் பேசியிருக்கக் கூடாது' என்று வருந்தினான். முதல் பிள்ளை போய் வெகு நாள் ஆகியும் திரும்பி வராததால் ராஜா இரண்டாவது மற்றும் மூன்றாவது பிள்ளைகளிடம் பயத்தை வெளிப்படுத்தினார்.

இதைக் கேட்டதும் இரண்டாமவன் தான் போய் மேஜிக் நீரைக் கொண்டு வருவதாகக் கூறிப் பயணித்தான். காட்டு வழியே சென்றபோது முதலாமவன் சந்தித்த அதே குள்ளனை வழியில் சந்தித்தான். ''நீங்கள் எங்கே போகிறீர்கள் இளவரசே?'' என்று பணிவுடன் கேட்டவனிடம் மிகவும் கோபம் கொண்டு, ''உனக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. வழியை விடு'' என்று கூறி வேகமாகச் சென்றான் இளவரசன். குள்ளனுக்கு இவன் மீதும் கோபம் வந்தது. சிறிது தூரம் சென்றதும் இரண்டாவது இளவரசனும் முதல் இளவரசன் மாட்டிக் கொண்ட அதே இடத்திற்கு வந்து விட்டான். மரங்கள் அவனைச் சூழ்ந்தன. ராஜாவிற்கு கவலை அதிகமானது. இதைப் பார்த்து மூன்றாமவன் தான் சென்று நீரைக் கொண்டு வருவதாகக் கூறி பயணம் செய்தான். ராஜா அவனை எச்சரித்து அனுப்பினார்.

கிழக்குப் பக்கம் செல்கையில் குள்ளன் தென்பட்டான். ''நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' என்று அவனைக் கேட்க, ''நான்




ஊற்று!

ஜி.இந்திரா

நோய் வாய்பட்டிருக்கும் என் தந்தை சாப்பிட மேஜிக் ஊற்றிலிருந்து நீர் கொண்டு வரப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று பணிவாகக் கூறினான். ''நீ சரியான வழியில்தான் செல்கிறாய். நான் உனக்கு உதவி செய்கிறேன். நேராகச் செல். அங்கு பெரிய ஊற்று உள்ளது. அதைத் தாண்டி ஒரு பெரிய கதவு இருக்கும். மூன்று முறை தட்டினால் கதவு திறக்கும். உள்ளே இரண்டு பெரிய சிங்கங்கள் இருக்கும்.

''இதோ இந்தப் பெரிய இரண்டு ரொட்டிகளை அவற்றிற்குக் கொடு. அவை உனக்கு வழி விடும். உள்ளே சென்றால் மேஜிக் ஊற்று தென்படும்'' என்று கூறி ரொட்டிகளைத் தந்தான். குள்ளனுக்கு நன்றி தெரிவித்து விட்டு, மாஜிக் ஊற்றைத் தேடிப் புறப்பட்டான் இளவரசன். குள்ளன் சொன்னது போல் ஒரு பெரிய ஊற்று வந்தது. மூன்று முறை தட்டியதும் கதவு திறந்தது. இரு சிங்கங்கள்



தென்பட்டன. ஆனால் அங்கு மாஜிக் ஊற்றுத் தென்படவில்லை. அதற்குப் பதிலாக ஓர் அழகான பெண் இருந்தாள்.

அந்தப் பெண்ணிடம் "ஊற்று எங்கே உள்ளது?" என்று இளவரசன் கேட்க, அவள் வழியைக் கூறி ஒரு கோப்பையையும் தந்தாள். அதில் நீர் எடுத்துக் கொள்ளச் சொன்னாள். மேஜிக் ஊற்றிற்குச் சென்று கோப்பையில் நீரை எடுத்துக் கொண்டான். பிறகு அந்தப் பெண்ணிடம் வந்து, "நீ என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?" என்று இளவரசன் கேட்டான். அதற்கு அந்தப் பெண், "நீ எனக்காக ஒரு வருடம் காக்க வேண்டும்" என்றாள். இளவரசன் ஒரு வருடம் கழித்து அவளைப் பார்க்க வருவதாகக் கூறிச் சென்றான். செல்லும் வழியில் தனக்கு உதவிய குள்ளனைக் கண்டு, "உன்னால்தான் மேஜிக் ஊற்று நீர் கிடைத்தது. எனக்கு என் அண்ணன்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"அவர்கள் மோசமானவர்கள். நான் அவர்களைச் சிறை பிடித்திருக்கிறேன்" என்றான் குள்ளன். அதற்கு மூன்றாவது இளவரசன் "தந்தை அவர்களைப் பார்க்காமல் கவலை அடைவார். எனக்காக அவர்களை நீ மன்னித்து விடு" என்றான். அவர்களை விடுவித்து அவனுடன் அனுப்பி வைத்தான் குள்ளன். அண்ணன்களைக் கண்டதும் அவர்களைத் தழுவி நடந்ததைக் கூறினான். அவர்கள் இருவருக்கும் அவன் மீது பொறாமை ஏற்பட்டது. அதை வெளிக்காட்டாமல், "நாம் இங்கு தங்கி சிரமபரிகாரம் செய்து பிறகு போகலாம்" என்றார்கள். அவர்கள் சொன்னபடியே கேட்டான். மூன்றாவது இளவரசனுக்குத் தூக்கம் வந்தது. உறங்கிப் போனான்.


இதுதான் சமயம் என்று இரண்டு இளவரசர்களும் கோப்பை நீரை எடுத்து வேறு ஒரு கோப்பையில் ஊற்றிக் கொண்டு, அதில் அருகிலிருந்த ஓடையின் நீரைப் பிடித்து வைத்துவிட்டார்கள். தூங்கி எழுந்த இளவரசனுக்கு சதி தெரியாமல் "வாருங்கள் சீக்கிரம் போவோம்" என்று கூறினான். அரண்மனை வந்ததும் தன் தந்தையிடம் மூன்றாவது இளவரசன் கோப்பை நீரை அருந்தும்படி கூறினான். அதைக் குடித்ததும் மயங்கிவிட்டார் அரசர். இரு அண்ணன்களும் அருகில் வந்து தாங்கள் கொண்டு வந்த கோப்பை நீரைப் பருகச் சொன்னார்கள். அதைக் குடித்ததும் நன்றாக ஆனார் அரசர். அவர்களைப் புகழ்ந்து, மூன்றாவது இளவரசனைக் கோபித்து வெளியே துரத்தி விட்டார் அரசர்.

மூன்றாவது இளவரசன் அழுது கொண்டே பல இடங்கள் சுற்றி சரியாக ஒரு வருடம் கழித்து தான் சந்தித்த பெண்ணைத் தேடிப் போனான். மேலும் இவன் தன் அண்ணன்களிடம் இவளைப் பற்றிய விவரங்கள் கூறியதால் மூன்றாவது இளவரசன் சென்று பார்ப்பதற்குள் இந்த இரு இளவரசர்களும் நல்லாடைகள் அணிந்து அந்தப் பெண்ணைப் பார்க்கச் சென்றனர். தங்கத்தால் போட்ட சாலைக்கு முன் ஒரு பெரிய அரண்மனையில் அவள் இருந்தாள். இவர்கள் இருவரையும் வாயில் காப்போன் உள்ளே விடவில்லை. இவர்கள் உண்மையான இளவரசர்கள் இல்லை என்று கூறி அனுப்பி விட்டனர். மூன்றாவது இளவரசன் கதவருகில் சென்றான். அவனைப் பார்த்ததும் வாயில் காப்போன் அடையாளம் கண்டு கொண்டு இளவரசியிடம் அழைத்துச் சென்றான். அவன் மிகவும் இளைத்து இருப்பதைப் பார்த்து வருத்தமுற்ற இளவரசி காரணம் கேட்க, தன் அண்ணன்களால் துன்புறுத்தப்பட்டதை கூறினான்.

இளவரசி அவனைச் சமாதானம் செய்து அவன் தந்தையை வரவழைத்து அவரிடம் நடந்ததைக் கூறினாள். ராஜாவிற்கு அதிர்ச்சி ஏற்பட்டது. தன் நடத்தைக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டு தன் மூத்த இளவரசர்கள் இரண்டு பேரையும் நாடு கடத்தி விட்டார். மூன்றாவது இளவரசனும் இளவரசியும் திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தனர். ●



24 மணி நேரத்தில் சராசரியாக ஒரு மனிதன் 23,040 முறை மூச்சு விடுகிறான்.



பறித்த தேங்காய்கள் எத்தனை?

புதிர் உலகம்



I. முத்து காட்டூர், மேட்டூர், கோட்டூர் ஆகிய மூன்று ஊர்களுக்கும் பேருந்தில் சென்று துணி விற்பவர். காட்டூருக்கு பஸ் கட்டணம் 5.50, மேட்டூருக்கு 7.50, கோட்டூருக்கு 8.50. பயணச் சீட்டுக்குப் பணம் கொடுக்கும்போது ஒரு 50 பைசாவையும் சேர்த்துக் கொடுத்து மீதி சில்லரை பெறுவது முத்துவுக்கு வழக்கம். ஆனால் செவ்வாய்க்கிழமை மட்டும் 50 பைசா கொடுக்காமலே பயணச் சீட்டு வாங்கி விடுவார். ஞாயிறு விடுமுறை. அப்படியானால் ஒரு வாரத்தில் மூன்று ஊர்களுக்குப் போய் வர அவருக்குத் தேவையான 50 பைசாக்கள் எத்தனை?

- மு. அகமது ஆதில், பத்தாம் வகுப்பு, தூய அருளின்பர் உயர் நிலைப்பள்ளி, பள்ளங்கோயில்

II. ஆறு எழுத்தில் ஒரு ஊர்.

1) அதில் 1ம் 5ம் 6ம் சேர்ந்தால் தலை.

2) 5ம் 6ம் 4ம் 3ம் சேர்ந்தால் தச்சர் கருவி.

3) 4ம் 2ம் 3ம் சேர்ந்தால் வெந்தது பார்க்கும் முறை.

4) 4ம் 5ம் 6ம் சேர்ந்தால் ஆதிக் கடவுள்.

5) 5ம் 2ம் 6ம் சேர்ந்தால் தேர்.

- ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம், கோபி.

III. கீழ்கண்ட 8 கேள்விகளுக்கும் பதில்கள் 'ம்' என்ற எழுத்தில் முடிவடையும். எங்கே விடைகளைக் கூறுங்கள்!

1) மின் தடையைக் கண்டுபிடித்தவர்?

2) பட்சிகளில் தந்திரமுள்ளது எது?

3) இலங்கையில் கிடைக்கும் உலோகம்?

4) தென்னிந்தியாவில் மிகப் பெரிய கோவில் அமைந்துள்ள இடம் எது?

5) திரவத்தங்கம் என்று அழைக்கப் படுவது?

6) பாரதப்போர் நடைபெற்ற இடம்?

7) தமிழகத்தில் மலைவாசஸ்தலங்களின் ராணி எது?

8) டெல்லியின் பழையப் பெயர் என்ன?

- கு. மேனகா, தஞ்சாவூர்

IV. திங்கட்கிழமை வேலைக்குப் போன குப்பனுக்குக் கூலி மிகவும் குறைவாகவே கிடைத்தது. மறுநாள் செவ்வாய்க்கிழமை திங்கட்கிழமையில் கிடைத்த கூலியைவிட ஆறு ரூபாய் அதிகம் கிடைத்து. புதன் கிழமை, செவ்வாய்க்கிழமை கிடைத்த

கூலியைவிட ஆறு ரூபாயும், வியாழக் கிழமை, புதன் கிழமையைவிட ஆறு ரூபாயும், வெள்ளிக்கிழமை, வியாழக்கிழமைக் கிடைத்த கூலியை விட ஆறு ரூபாயும் அதிகம் கிடைத்தது. சனிக்கிழமை குப்பன் வேலைக்குச் செல்லவில்லை. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை அவனுக்குக் கிடைத்த கூலியை எண்ணிப் பார்த்தான். மொத்தம் 100 ரூபாய் இருந்தது. அப்படியென்றால் குப்பன் ஒவ்வொரு நாளும் பெற்ற கூலி எவ்வளவு?

- ஏ.ஜி. முகம்மது தௌபீக்,
மேலப்பாளையம்

V. பள்ளிக்கூடத்தில் வாத்தியார் வீட்டுக் கணக்கு கொடுத்திருந்தார். கணக்கில் மந்தமான சோமுவுக்கு வீட்டுக் கணக்குகள் தப்புத் தப்பாக வந்தன. கோபத்தில் சோமு கணக்குப் புத்தகத்தின் பக்கங்களைக் கிழித்து வீசினான். அப்படி அவன் கிழித்தப் பக்கங்கள் 6, 7, 84, 111, 112. சோமு கிழித்துப் பறக்க விட்ட காகிதங்கள் எத்தனை?


- வெ. ராணி, நாமகிரிப்பேட்டை.

VI. என் வயதும் என் தம்பியின் வயதும் 3:2 விகிதம். என் தம்பியின் வயதும் எங்கள் தங்கையின் வயதும் 3 : 2 விகிதமே. எங்கள் மூவரின் வயதையும் கூட்டினால் 19 வரும். அப்படியானால் எங்களின் வயதென்ன?

- நெ. இராமன், சென்னை


VII. ஒரு பண்ணையார் புதிதாகச் சேர்ந்த வேலைக்காரனின் அறிவைச் சோதிக்க விரும்பினார். வேலைக்காரனிடம் "இங்கே நான்கு சாக்குப் பைகள் உள்ளன. அவற்றுடன் தென்னந்தோப்பிற்குச் சென்று 33 தேங்காய்களை மட்டும் பறிக்க வேண்டும் ஒவ்வொரு சாக்குப் பையிலும் போடும் தேங்காய்களின் எண்ணிக்கை ஒற்றைப் படை எண்களிலேயே இருக்க வேண்டும் (1, 3, 5, 7, 9 என்பது போல). எந்தச் சாக்குப் பையிலும் இரட்டைப் படை எண்ணில் தேங்காய்கள் இருக்கக்கூடாது" என்று கூறி அனுப்பினார். புத்திசாலியான அந்த வேலைக்காரன் பண்ணையார் கூறியபடியே பிரித்துக் கட்டிக் கொண்டு வந்து அவரை வியக்க வைத்துவிட்டான். ஒவ்வொரு சாக்குப் பையிலும் ஒற்றைப் படை எண்ணில் எத்தனை தேங்காய்கள் இருக்கும்?

- ஆ.ந.அ.ரவி, கம்பம்



விடைகள்

I. 24 ஐம்பது பைசாக்கள் தேவை.
II. சிதம்பரம் 1) சிரம், 2) ரம்பம், 3) பதம், 4) பரம், 5) ரதம்
III. 1. ஓம், 2) காகம், 3) காரியம், 4) ஸ்ரீரங்கம், 5) பெட்ரோலியம், 6) குருக்ஷேத்திரம், 7) உதகமண்டலம், 8) இந்திரப்ரஸ்தம்
IV. 8 + 14 + 20 + 26 + 32 = 100
V. 4 பக்கங்கள். 111, 112ம் பக்கங்கள் ஒரே காகிதத்தில் (முன் பின்னாக)தான் இருக்கும்.
VI. என் வயது = 9 தம்பியின் வயது = 6 தங்கையின் வயது = 4
VII. ஒவ்வொரு சாக்குப் பையிலும் 11 தேங்காய்கள் வீதம் 33ஐ மூன்று சாக்குப் பைகளில் வைத்தான். பிறகு அந்த மூன்று சாக்குப் பைகளையும் நான்காவது சாக்குப் பைக்குள் வைத்துக் கொண்டு வந்தான்.



1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி

இந்த மாதப் போட்டிக்குத் தயாரா?

நீங்கள் செய்ய வேண்டியது :

- சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும்.
- பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும்.
- முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.








ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 20.10.2004

ஹங்கேரி

1. தலைநகரம் __________
2. மொழி __________
3. முக்கிய இடங்கள் ________ , _______
4. கரன்ஸி __________
5. எர்னோ ரூபிக் என்ற ஹங்கேரியனால் __________ கண்டுபிடிக்கப்பட்டது.



6. இது எந்த நாட்டுக் கொடி?


ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097

ஞாபகம் வருதே..

நினைவில் நின்றவை...

சாதகம்...

நான் விடுமுறைக்கு என்னுடைய சித்தப்பா வீட்டிற்குச் சென் றிருந்தேன். சித்தப்பாவிற்கு இரண்டு பெண்கள். நான் அவர்களுடன் விளை யாடிய நேரம் போக மற்ற நேரங்களில் அவர் கள் இருவரும் பாடல் சாதகம் செய்வார்கள்.




இருவரும் கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள் கிறார்கள். என் சித்தப்பா, அவர்களுக்கு வகுப்பில் சொல்லிக் கொடுப்பதை டேப்பில் பதிந்து, அதை வீட்டில் போட்டு, இருவரும் பிராக்டிஸ் செய்ய ஏற்பாடு செய்திருந்தார். இந்த முறை நல்ல முறையாக இருக்கிறது. இதை எல்லோரும் பின்பற்றலாமே?

- ஆர். அம்பிகா, மதுரை

நைஸ் நேம்!

கோடை விடுமுறையில் அத்தையும், அவரது மகள் பொன்னியும் எங்கள் வீட்டிற்கு வந்திருந் தார்கள். எங்கள் தெருவில் அனைவரிடமும் நன்றாகப் பழக ஆரம்பித்தாள் பொன்னி. அன்றும் வழக்கம் போல என் தங்கை மினுவும் அவளும் பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கையில், அந்த வீட்டு அங்கிள், ''உன் பேர் என்ன?'' என்று கேட்டார். இவளும் ''பொன்னி'' என்று பதில் கூறினாள். உடனே அவர், ''நைஸ் நேம்'' என்று பாராட்டினார். அதைக் கேட்டவுடன் மினு, ''அங்கிள்! 'பொன் னி'ங்கறது நைஸ் நேம் கிடையாது. அது 'ரைஸ், நேம் '' என்றாளே பார்க்கலாம்! அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.



- எம். வினோத், சங்கரன்கோயில்

ஐஸ் கிரீம்

கலகலப்பான அந்தத் திருமண வீட் டில் மதிய உணவுடன் அனைவருக்கும் ஐஸ் கிரீம் வழங்கப்பட்டது. என் தங்கை ஹேமா இரண்டு ஐஸ் கிரீமை கைகளில் பிடித்தபடி வந்து கொண்டிருந்தாள். அவளை வழி மறித்த மாமா ''ஹேமா, மாமா வுக்கு ஒரு ஐஸ் கிரீம் தாம்மா?'' என்றார்.

''இந்த இரண்டு ஐஸ் கிரீமும் கசக்குது மாமா'' என்றாள். ''என்னது ஐஸ் கிரீம் கசக் குதா?'' என்றார் மாமா. ''ஆமாம் மாமா. இது கசக்குது. உங்களுக்கு நல்லா இனிக்கிற ஐஸ்கிரீமா நீங்களே போய் வாங்கிக்கங்க. கசக்கிற இரண்டையும் நானே தின்னுட றேன்'' என்றவுடன் அங்கிருந்த அனை வரும் குலுங்கி குலுங்கி சிரித்தனர்.

- எம். கலைச்செல்வி, இராஜபாளையம்

விளக்கம்...

நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டு இருக்கிறேன். சென்ற வருடம் ஒரு நகைச்சுவையான சம்பவம் எங்கள் வகுப்பறையில் நடந்தது. ஆசிரியர் எங் களுக்கு வினாடி வினா போட்டி நடத் தினார். எங்கள் வகுப்பறையில் மொத்தம்

ஞாபகம் வருதே...





நான்கு வரிசை உள்ளது. அதனால் இரண்டு வரிசையை ஓர் அணியாய் சேர்த்து அணிக்கொரு தலைவர் நியமித்தார்.

யார் வேண்டுமானாலும் எதிரணியினரை அணி தலைவர் அனுமதியோடு கேள்வி கேட்கலாம். அப்போது எங்கள் அணி சார்பாக ஒரு மாணவன் எழுந்து நின்று ஒரு குறிப்பிட்ட குறளுக்கு விளக்கம் கேட்டான்.

ஒருவன் எழுந்து தெளிவாக விளக்கம் கூறியும் அவன் ஏற்கவில்லை. ஆசிரியரே வியப்பில் ஆழ்ந்தார்.

இறுதியில் யாரும் அவன் எதிர்ப்பார்த்த பதிலை கூறாததால் ஆசிரியர் அவனை பதில் கூறும்படி சொன்னார். அவனும் திடமாக எழுந்து : "108ம் பக்கம் பார்த்து விடை புரிந்து கொள்க" என்றான். அதன் பிறகு வகுப்பே சிரிப்பில் மூழ்கியது.

- சி. அரவிந்தா, தஞ்சை

தோழி


என்னுடைய நெருங்கிய சினேகிதி சசி. நானும் அவளும் இரண்டாம் வகுப்பில் இருந்து ஒன்றாகவே படித்து வந்தோம். ஏழாம் வகுப்பில் சூழ்நிலை காரணமாக அவள் வேறு இடம் பிரிய நேரிட்டது. அவளுடைய முக வரியும் தெரியவில்லை. சினேகிதி என்றாலே எனக்கு அவள் பெயர்தான் நினைவில் வரும். நான் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்பொழுது பொங்கலன்று வாழ்த்து அட்டை ஒன்று வந்தது. அதைக் கண்ட நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். அது என் சிநேகிதி சசியிடம் இருந்து வந்திருந்தது. ஐந்து வருடத்திற்கு பின் முதன்முறையாக கடிதத்தில் சந்தித்தோம். அன்றைய தினத்தை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. தற்போது பொங்கலுக்கு வாழ்த்து வந்துள்ளது என்றாலே எனக்கு அவள் நினைவுதான் வரும்.

- ஆர். இந்துமதி, மிட்டூர்

உணவு

அன்று எங்களுக்கு அறிவியல் பாட வேளை. ஆசிரியர் ஜாலியானவர். அன்று பாடம் நடத்திவிட்டு முதல்நாள் எழுதிய தேர்வுத் தாள்களைத் திருத்திக் கொண்டு இருந்தார். அப்போது பின் வரிசையில் இருந்த குறும்பு மாணவன் ஒருவன் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். இதைப் பார்த்த ஆசிரியர் அவனை எழுப்பி, "இன்னும் கொஞ்ச நேரம் பொறுக்க முடியவில்லையா?" என்று கேட்டார். உடனே அந்தக் குறும்பன் ஆசிரியரைப் பார்த்து, "செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கு ஈயப்படும்" என்று கூறினானே பார்க்கலாம்!

- தி.கா. ஆனந்தன், வெள்ளையாம்பட்டு





யாளியைத் தேடிய



"இதனால் சகலமான பேருக் கும் தெரிவிப்பது என்னவென்றால் காட்டிலே திரியும் பயங்கர யாளியை யார் உயிருடனோ, பிணமாகவோ பிடித்து வந்தாலும் அவர்களுக்கு ராஜகுமாரி யசஸ் வினியை மணமுடித்துத் தருவதோடு பாதி ராஜ்ஜியமும் அளிக்கப்படும்". 'டமடமடம' என்று அறிவிப்பைத் தொடர்ந்து முரசறை யப்பட்டது.

பிழைப்பைத் தேடி ஊர் விட்டு ஊர் வந்த கௌசிகன், கவுணியன், கயாதரன் மூவரும் இதைக் கேட்டனர்.

"அந்த யாளியைப் பிடிக்க நாம் முயன்றா லென்ன?" என்று கேட்டான் கௌசிகன்.

"விளையாடுகிறாயா? அதன் நாக்கு ஆறடிக்கு நீள்கிறதாம்! மேய்ச்சலுக்குப் போன ஆடு, மாடு, மனுஷன் எல்லாத்தை யும் நாக்காலேயே அடிக்கிற அதுகிட்டே மாட்டினா என்ன ஆவோம்?" என்றான் கயாதரன்.

"பயப்பட்டா சாதனை செய்ய முடியாது! எதையாவது நல்லவிதமா சாதிச்சுப் பேர் வாங்கணும்! இப்படியே கூலிக்கு வேலை செஞ்சு கோட்டையா கட்ட முடியும்? என் னிக்காவது ஒரு நாள் மரணம் நிச் சயம். துணிஞ்சு தான் பார்ப்பமே" என்றான் கவுணியன்.

"அதோட நாக்குலே பசை இருக் குமோ?" என்று சந்தேகக் குரலில் கயாதரன் கேட்க, "உன்னை அது நாக்கை நீட்டி சுருட்டிக்குமே, அப்பத் தெரிஞ்சுக் குவே" என்று நக்க லாகச் சொன் னான் கவுணி யன்.

"பேசாம இருடா! அவன் ஏற்கனவே பயந் திருக்கான்" என்று அடக்கினான் கௌசிகன்.


மூவரும் அரசவைக்குச் சென்று மன்ன ரிடம் தாங்கள் யாளியைப் பிடிப்பதாகக் கூறினர்.

வேந்தர் மூவரையும் ஏற இறங்கப் பார்த்து, "மூன்று பேருமாகப் பிடித்து வந் தால் யாருக்கு இளவரசியைத் திருமணம் செய்து தருவது?" என்று கேட்க, அருகி லிருந்த அமைச்சர், "மூவரில் ஒருவரை அரசிளங்குமரியே தேர்ந்தெடுக்கட்டும்" என்றார்.

நண்பர்கள் மூவரும் இதை ஒப்புக் கொண்டு சென்றனர். நகர எல்லையில் ஒரு முனிவர் மயக்கமாயிருப்பதைக் கண்டு முதலுதவி செய்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த அவருக்குத் தங்களிடமுள்ள பழங்கள், சத்துமாவு முதலியவற்றைக் கொடுத்தனர்.

பசி தீர்ந்த ரிஷி மகிழ்ச்சியுடன், "வாலிபர்களே! உங்களின் இரக்க குணம் உங்களுக்கு மேன்மையான வாழ்வைத் தரும்" என ஆசீர்வதித்து அவர்களின் நோக்கத்தைக் கேட்டறிந்தார்.

"வெற்றியுண்டாகட்டும். ஒற்றுமையாய் செயல்படுங்கள். என்னா லான கைம்



கௌசிகன்!


மாலதி

மாறு ஒன்று தருகிறேன்'' என்றவர் ஒரு மைச் சிமிழைக் கொடுத்தார்.

''இதிலுள்ள அஞ்சனத்தை இரு புருவத்துக்கும் நடுவில் தடவிக் கொண்டால் மூன்றே முக்கால் நாழிகை எவர் பார்வையிலும் தென்பட மாட்டீர்கள்! தவறான காரியங்களுக்கு இதைப் பயன்படுத்தினால் விளைவு விபரீதமாகி விடும்'' என எச்சரித்துத் தன் வழி சென்றார்.

மூவரும் கடவுளின் அருளை வியந்தபடி வழி நடந்தனர். மூவரும் மையைத் தடவிக் கொண்டு ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி காட்டில் அலைந்து யாளியைத் தூரத்தில் கண்டனர். அதன் பற்களும் முக விகாரமும் பூதாகரமான வடிவமும் அவர்களை நிலைகுலைய வைத்தன.

பத்தடி தள்ளி சப்தமிடாமல் அதைப் பின் தொடர்ந்தனர். ''மனித வாடை அடிக்கிறது. ஆனால் யாரையும்



காணோமே'' என்று புலம்பியது யாளி. இவர்களும் ஒன்றரை மணி நேரத்துக் கொருமுறை மை தடவிக் கொண்டே இருந்தனர்.

விடியும் தறுவாயில் யாளி தன் குகைக் குச் செல்ல, நண்பர்கள் பின் சென்றனர்.

குகையா அது! அரண்மனை மாதிரி பல அலங்காரங்களுடன் இருந்தது. யாளி சிறிது நேரத்தில் உறங்க, நண்பர்கள் குகையைச் சுற்றிப் பார்த்தனர். மாட்டுக் கொட்டில், குதிரைக் கொட்டடி, கோழிப் பண்ணை எல்லாம் நிறைந்து இருந்தன.

மாட்டுக் கொட்டிலிலிருந்த ஒரு மாடு ''மனிதர்களே'' என்றழைக்கவும் திடுக்கிட் டனர்.

''உனக்கு நாங்கள் தெரிகிறோமா?'' என மெல்லிய குரலில் கேட்டனர்.

''ஆமாம். என் பார்வையிலிருந்து எது வும் தப்ப முடியாது. மந்திர மாயங்கள், மூலிகை மைகள் என்னிடம் செல்லாது. நான் ஒரு அபூர்வப் பிராணி. நான் போடும் சாணம் தங்கமாயிருக்கும். எனது கோநீர் பன்னீராயிருக்கும். இந்த யாளி ஒரு அரக்கன். மந்திர சக்தியால் தன் நாக்கை இஷ்டத்துக்கு நீட்ட முடியும். என் மகிமை யெல்லாம் இந்த அரக்கனிடம் அடைபட் டிருப்பதை நான் விரும்பவில்லை. என்னை விடுவித்து அழைத்துச் செல்லுங்கள். உங்களைக் கோடீஸ்வரராக்குகிறேன்'' என்றது.

இதைக் கேட்டு சுயாதரன் மிகவும் சந்தோஷப்பட்டான்.

''நண்பர்களே! நாம் இப் பசுவுடன் சென்று விடுவோம். நாம் முனிவர் சொன்ன படி ஒற்றுமையாய் தங்கத்தைப் பகிர்ந்து கொண்டு வாழ்வோம். எதற்கு யாளியைப் பிடிக்கும் ஆபத்தான காரியத்தில் இறங்க வேண்டும்?'' என்றான்.

''முன் வைத்த காலை பின் வைக்கக் கூடாது. சாமர்த்தியம் வேறு; சம்பாத்தியம் வேறு. தொடங்கிய செயலை முடிப்பவனே வீரன். நான் வருவதற்கில்லை'' என்று ஆணித்தரமாகச் சொன்னான் கௌசிகன்.

''இன்று நாம் ஒற்றுமையாயிருக்கலாம். நமக்கு வாய்க்கும் மனைவியர் பொறாமை கொண்டவராயிருந்து விட்டால் நம் நிம்மதி அழிந்து விடும். அதனால் பசுவின் லாபங் களை நீ மட்டுமே அனுபவித்துக் கொள். நீ போகலாம்'' என்றான் கவுணியன்.


பசுவோடு சென்று விட்டான் சுயாதரன்.

பன்றிக் கூட்டத்தில் ஒரு பன்றி பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்தது. நண்பர்கள் இருவரும் அதற்கு உதவினர். அழகழகாய் எட்டு குட்டிகளை ஈன்ற பன்றி,

''தோழர்களே! எல்லோரும் அருவெறுப் பாய் முகத்தைச் சுளிக்கும் எங்களுக்கும் உதவும் ஈரமனம் கொண்ட உங்களுக்கு ஒரு பரிசு தர விரும்புகிறேன். யாளியாகிய அரக்கன் தூக்கத்திலிருந்து எழுந்து வேட்டைக்குச் செல்கையில் நான்கு பக்கமும் மணிகள் கட்டிய போர்வையை மடித்து வைப்பான். அது மந்திரப் போர்வை. நினைத்த இடத்துக்குப் பறந்து செல்லும். சொல்லும் இடத்தில் இறங்கும். நீங்களிருவரும் அதில் ஏறி தப்பி விடுங்கள்'' என்றது.


இதைக் கேட்டு கவுணியன் பரவசப் பட்டான்.

''கௌசிகா! ஓர் இடத்தில் முடங்கிக் கிடக்க எனக்குப் பிடிக்காது. பல நாடுகள் சுற்ற வேண்டும். பலவித அனுபவங்கள் பெற வேண்டும் என்பதே என் லட்சியம்.



இந்த வரியைப் படித்து முடிப்பதற்குள் நமது உடம்பில் 50,000 செல்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

ஆணின் இதயத் துடிப்பை விட பெண்ணின் இதயத் துடிப்பு அதிகம்.



இளைஞர்களான நாம் இந்த அரக்கனுக்கு இரையாக வேண்டுமா? நன்கு யோசி. நீயும் வா. நாம் பறந்து விடலாம்'' என்றழைத்தான்.

''நண்பனே! போர்வையில் உன் போல் ஆசை கொண்டோரை அழைத்துச் சென்று வருமானம் தேடிக் கொள். மன்னனாவதே என் குறிக்கோள்'' என்று உறுதியாகச் சொல்லி விட்டான்.

மறுநாள் யாளி வெளியே சென்றதும் மணிப் போர்வையை விரித்து, பன்றி சொல்லிக் கொடுத்த மந்திரத்தைச் சொல்லி கவுனியன் அதில் ஏறி அமர்ந்தான். போர்வை ஜிவ்வென்று பறந்து சென்றது.

காட்டில் அதைப் பார்த்த யாளி நாக்கை நீட்டியது. ஆறு அடிக்கு மேல் அதனால் நீட்ட முடியவில்லை. போர்வையில் பயணம் செய்த கவுணியன் ஏளனமாய் நகைத்தான்.

யாளி அரக்கன் குகைக்குத் திரும்பி வந்து கர்ஜித்தது. எல்லா இடங்களையும் பார்வையிட்டபோது பசுவைக் காணாமல் மேலும் கோபமுற்றது.

நோய் கண்டு இறந்த கோழிகளைக் குகைக்கு வெளியே வீசியது. அன்று இரவு யாளி உறங்கியதும் நோயுற்ற கோழிகளுக்கெல்லாம் வைத்தியம் செய்தான் கௌசிகன். அவனுடைய பரம்பரையே மிருக வைத்தியம்தான். கற்ற தொழில் கை கொடுத்தது. அதோடு குதிரையின் முதுகிலிருந்த புண்ணுக்கும் பச்சிலை பறித்து வந்து கசக்கி அப்பினான்.

குதிரை நன்றியோடு ''நண்பரே! என்னையும் பட்டினியாக கிடக்க நேர்ந்தால் இவன் உணவாக்கிக் கொள்வான். என்னை உங்களோடு அழைத்துச் செல்லும்படி வேண்டுகிறேன். அவனது உயிர் நிலை அவன் கைவிரல் மோதிரத்துள் இருக்கிறது. அவன் மூர்ச்சையாவது மல்லிகைப் பூவின் நறுமணத்தால். அதை எடுத்து வந்து அவனை மோப்பம் பெறச் செய்யுங்கள். அவன் மயங்கியதும் அவன் கை விரலிலுள்ள மோதிரத்தை எடுத்து வாருங்கள்'' என்றது.

குதிரை சொன்னபடி யாளி மயக்கமுற சிவப்புக்கல் மோதிரத்தை எடுத்து வந்தான்.

''நேரமானால் வாசனை பழக்கமாகி எழுந்து விடும்'' என்று துரிதப்படுத்தியது குதிரை. அதே நேரம் சுளுந்தில் காட்டிய சிவப்புக்கல் உருக இரத்தம் போல் கொட்டியது.

''எடு. கத்தியால் நெம்பு'' என்றது.

அப்படியே செய்தான். உள்ளே ஒரு புழு நெளிந்தது. குதிரையின் சொற்படி நசுக்கினான். இறந்த யாளி அரக்கனை அங்கிருந்த ஒரு பெட்டியில் போட்டு அரசரிடம் கொண்டு போய் காட்டினான்.

அரசர் வாக்களித்தபடி தன் குமாரி யசஸ்வினியை மணமுடித்துக் கொடுத்து ராஜ்ஜியத்தையும் ஒப்படைத்தார். தனக்கு உதவி செய்த குதிரையை பட்டத்து குதிரையாக்கிக் கொண்டான் கௌசிகன்.

அரசர் குகைக்குச் சென்று நிம்மதியாய் ஓய்வெடுத்தார்.

காகிதத்தில் குட்டீச்

நெட் பிட்ஸ்



தங்க மீனை உற்றுப் பாருங்கள். அதன் வாய்க்குள்ளே இன்னொரு மீன். கேட்டால் டிரிக் ஷாட் என்கிறார்கள்!

ஏப்ரான் கட்டிக் கொண்டு, தலையில் குல்லாய் அணிந்து ஐந்து நட்சத்திர ஹோட்டல் சமையல்காரர் போல் போஸ் கொடுக்கிறது இந்த நாய். மிஸ்டர் நாயாரே, உங்கள் வீட்டில் என்ன சமையல் இன்றைக்கு?





ஆறு பேர் மனித பிரமிடு கட்டி நிற்கிறார்கள். யாராவது ஒருவருக்கு கிச்சு கிச்சு மூட்டினால் என்ன ஆகும்? மொத்த கோபுரமும் சாய வேண்டியதுதான்!



சாத்தான்!

இது கண்களை நம்பாதே டைப் படம். நேரே பார்க்கும் ஒற்றை முகமா? பக்கவாட்டில் நேருக்கு நேர் பார்த்துக் கொள்ளும் இரண்டு முகங்களா? இரண்டுமே தான்!




காகிதத்தை மடித்து, உருவங்களை உருவாக்கும் கலைக்கு ஓரிகாமி என்று பெயர். இந்தக் காகித மடிப்புக் கலை ஜப்பானில் மிகவும் பிரபலமானது. காகிதத்தை மடித்து உருவாக்கிய குட்டிச்சாத்தான் உருவம் இது. அயல் கிரக மனிதன் என்று கூடச் சொல்லலாம்.

நாய்க் குட்டிகளுடன் போஸ் கொடுக்கிற குழந்தைகளைப் பாருங்கள். உற்று கவனியுங்கள். நாய்களின் முகச்சாயல் குழந்தைகளுக்கு இருக்கிறதா? ஸாரி... குழந்தைகளின் முகச் சாயல் நாய்களுக்கு இருக்கிறதா?



தொகுப்பு : எஸ். சந்திரமௌலி





யாதும் ஊரே யாவரும் கேளிர்



எங்கள் எண்ணங்கள்...

இந்தியாவில் நிறையப் பேர் இந்தியத் தாயின் 'மூளையை எடுத்து வெளிநாட்டில் அடகு வைப்பது போல' இங்கு எல்லாச் சலுகைகளுடன் படித்து முடித்துவிட்டு தங்கள் திறமைகளை எல்லாம் காசுக்காகவும் சொகுசு வாழ்க்கைக்காகவும் வெளிநாட்டிற்குத் தாரை வார்த்து விடும் அவலம் நிலவுகிறது. இனி வரும் எதிர்கால இளசுகளின் மனங்களில் இந்த எண்ணம் வந்து விடாமல் இந்தியாவில் படித்து இந்தியத் திருநாட்டை உயர்த்துவதற்குப் பாடுபட வேண்டும் என்ற நல்லெண்ணம் தோன்றினால் தான் இந்தியா முன்னேறும்!

- கா. கணேசன், நீர்விளங்குளம்

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனார் கட்சிதான் நான். கற்றோருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்பதில் நம்பிக்கை எனக்கு உண்டு. நல்லாப் படிக்கணும், நிறையப் படிக்கணும். கொஞ்ச காலம் வெளிநாட்டில் வேலை செய்து, சம்பாதித்து செட்டில் ஆனவுடன் நம் நாட்டுக்கு நம்மால் இயன்ற நல்லதைச் செய்யணும்.


**- ஆர்.ஜி.உமா, பதினோராம் வகுப்பு,
உ.இ.மே.நிலைப் பள்ளி,
திசையன்விளை.**

நம் நாட்டில் படித்து விட்டு, அந்தப் படிப்பை வெளிநாட்டில்போய் வேலை பார்த்துச் செலவிடுவது என்பது, நம் சொந்தப் பிள்ளையையே பணத்துக்காக அடுத்தவருக்கு விற்பதற்குச் சமமாகும். நாம் படித்த படிப்பு நம் தாய் நாட்டிற்குத் தான் பயன்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, நாம் எந்த இடத்தைச் சார்ந்து படிக்கிறோமோ, அந்த இடத்திற்குள் தான் பலன் போய்ச் சேர வேண்டும். சமுதாயத்திற்கு, நம் தாய்த்திரு நாட்டிற்கு நம்முடைய சேவையை அர்ப்பணித்தல் தான், நாம் தாய் நாட்டிற்குச் செய்யும் மிகப் பெரிய உதவியாகும். இதை விடுத்து, எல்லோரும் பணம், பணம் என்று வெளிநாட்டிற்குப் போனால், நம் தாய் நாட்டு மக்கள் அந்தப் பலனை அடையாமல் கஷ்டப்படுவார்கள்.

**- ஆர். அம்பிகா,
மதுரை**

படித்து சொந்தமாக தொழில் தொடங்க மூலதனம் தேவை. அது எல்லோரிடத்திலும் இருக்காது. மேலும் வைரத்தை பட்டை தீட்ட தீட்டதான் ஜொலிக்கும். அதுபோல நாம் படித்த படிப்பில் நல்ல தொழில் நுணுக்கம் பெற வெளிநாட்டில் வேலை 4, 5 ஆண்டுகள் பார்த்தால் தொழில் நுணுக்கமும் பணமும் சேர்க்கலாம். அதன் மூலம் நாம் நம் நாட்டில் தொழில் தொடங்கி நாமும் நம் நாடும் செழிப்பாக வாழலாம்.

- டி.ஆர். பாலாஜி, மதுரை



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐
* ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐
* உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்:	நண்பரின் பெயர்: ....
முகவரி:	முகவரி: ....
....	....
....	....
....	....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097

8 கிளித் தலை இளவரசி

கதை : குறும்பலாப்பேரிப் பாண்டியன்   படம் : லலிதா




பொற்செல்வி மாங்கனியைக் கொத்தித் தின்றாள்.
சிறிது நேரமானது.
இசைவேந்தா, மாங்கனி சாப்பிட்டும் ஒன்றும் நடக்கவில்லையே!
அவசரப்படாதீர்கள் மன்னா.
என் நம்பிக்கை குறைகிறது இசைவேந்தா.
முனிவர் பொய் சொல்லியிருக்க மாட்டார்.
அதிகாலை நேரம் -
அரசே, கொஞ்சம் கண் விழியுங்கள்.
என்ன இசைவேந்தா?
இளவரசியாரின் முகம் பழைய நிலையை அடைந்துவிட்டது.
அட, ஆமாம்! பொற்செல்வி... பொற் செல்வி...


அப்பா... அம்மா... நான் பழைய நிலையை அடைந்துவிட்டேன்.
ஆமாம் மகளே! எவ்வளவு கஷ்டப்பட்டாய்?
இந்த இசைவேந்தனால் தான் நம் வேதனை தீர்ந்தது.
அப்படியா! தங்கள் உதவியை என்றும் மறக்கமாட்டோம்.
அப்பா, நாட்டு மக்களுக்கு இந்தச் செய்தியை அறிவித்து விடுங்கள்.
ம்... அத்துடன் இன்னொரு செய்தியும்...
என்ன சொல்லுங்கள்?
நான் அறிவித்தபடி இசைவேந்தனை இந்நாட்டுக்கு அரசனாக முடிசூட்டும் செய்தியும் சொல்ல வேண்டும்.
அரசே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்.
என்ன இசை வேந்தா?



எனக்கு நாடு வேண்டாம். என்னையும் என் தந்தையையும் இந்நாட்டுப் பிரஜையாக ஏற்றுக் கொண்டாலே போதும்.
நீ இந்நாட்டின் சாதாரண பிரஜை அல்ல. அரசன். இதில் மாற்றம் இல்லை.
நீங்கள் செய்த உதவிக்கு நாட்டை விடப் பெரிய பரிசு கூடத் தரலாம்.
பொற்செல்வி நீ இசை வேந்தனை மணக்க வேண்டும் என்பது என் விருப்பம்.
பொற்செல்வி சம்மதித்தாள்.
இசைவேந்தா, இன்றே உன் தந்தையை அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன்.
நன்றி அரசே!
இசைவேந்தனின் தந்தை, செங்கதிர் மன்னர் ஆகியோர் கலந்து கொள்ள, முடிசூட்டும் விழாவும் திருமணமும் கோலாகலமாக நடைபெற்றது.
முற்றும்




தை ஒன்று சேருங்கள்!

இங்கு ஒரு படம் பல துண்டுகளாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தை பெரியவர்களின் உதவியுடன் வெட்டி ஒரு வெள்ளைத்தாளில் ஒன்று சேருங்கள். தடிமனான அட்டை இருந்தால் அதில் இத் துண்டுகளை ஒட்டி, வெட்டி வைத்துக் கொண்டால் யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் விளையாடி மகிழலாம். முதலில் படத்தைச் சேர்க்கும்போது சிறிது நேரமாகும். மீண்டும் மீண்டும் விளையாடும்போது மிகவும் சுலபமாகிவிடும். குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயித்து, யார் சீக்கிரமாக ஒன்று சேர்க்கிறார்கள் என்று போட்டிகூட வைத்து விளையாடலாம்.















நெட் பிட்ஸ் சூப்பர்!

கடிதங்கள்

✉ செப்டெம்பர் கோகுலம் இதழில் நெட் பிட்ஸ் பகுதியில் சுவையான செய்திகளும் அபூர்வமான புகைப்படங்களும் அசத்தல்! மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதற்கு மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர் சங்கிலியே உதவும் என்ற வாசகம் ஆசிரியர் தினம் பற்றிய கட்டுரையில் சிறப்பாக அமைந்திருந்தது.

- பி. சுசீலா, உடுமலை



✉ 'காந்திக்கு மரியாதை' எழுதிய என் பெயரின் முன்பு என் அம்மாவின் இனிஷியலைப் போட்டு என் அம்மாவிற்கு மரியாதை செய்து விட்டீர்கள். அம்மாவின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. நானும் என் அம்மாவின் இனிஷியல் போட்டுக் கொள்வதில் மகிழ்கிறேன்.

- ச. டேனியல் லியோ பிரபு,
ஒன்பதாம் வகுப்பு,
செயின்ட் பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி,
மதுரை

✉ 3 எச்சரிக்கைகள்; 300 தங்கக் காசுகள் படக்கதை படங்களுடன் மிக அருமை. மிக்ஸர் பிட்ஸில் நிஜ மிக்ஸரின் நடு நடுவே அரிசி மிட்டாய் இருந்து சுவையூட்டுவது போல் பல துணுக்குகள் இனித்தன.

- ராஜிராதா, திருச்சி

✉ அட! இது என்னங்க நீங்க! படு சுவாரஸ்யமாக துவங்கிய 'சீக்கூவின் தைரியம்' சிறுகதையை இவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டீர்களே! பெரிய படம், சிறிய கதை இதுவும் புதுமைதான்.

-ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை

✉ 'சோணாசலம் வீட்டில் திருடர்கள்' கதையில் தெனாலிராமன் கதையின் சாயல் தெரிகிறதே!


- ஆர்.எஸ்.லக்ஷ்மி, மதுரை

✉ தமிழ் கோகுலத்தில் இவ்வளவு செய்திகளா? பார்த்ததும் ஆச்சரியப்பட்டோம். என் அண்ணன் குழந்தைகளுக்கும் நண்பர்களுக்கும் கோகுலத்தை சிபாரிசு செய்து உள்ளேன்.

- ஆர்.கே. திருப்பதிரங்கன்,
சென்னை

ஓவியப் போட்டி

குளக்கரைகளில், பச்சை வயல் வெளிகளில் ஒய்யாரமாக ஒற்றைக் காலில் நிற்கும் கொக்குகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : **கொக்குகள்.** கொக்குகள் பறக்கலாம்; நிற்கலாம்; மீன் பிடிக்கலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 8.10.2004



புத்தகம் நம் தோழன்

விவாத மேடை



விவேக் வீட்டுக்குப் ப்ரியா வரும் பொழுது அவன் ஏதோ ஒரு கதைப் புத்தகத்தில் மூழ்கியிருந்தான். நீண்ட நேரமாகியும் தன்னை கவனிக்காததைக் கண்ட ப்ரியாவுக்கு கோபம் வந்தது.

வேகமாக விவேக் கையிலிருந்த புத்தகத்தைப் பறித்தாள்.

"ப்ரியா, புத்தகத்தைக் கொடு. ரொம்ப சுவாரசியமான கட்டத்துல பறிச்சிட்டியே" என்றான் விவேக்.

"ஏன் விவேக் பேய்க் கதைகள்தான் படிப்பியா?"

"புத்தகம் படிக்கிறதே நல்ல விஷயம்தானே ப்ரியா. அதுல எந்த மாதிரி புத்தகம் படித்தால் என்ன?"

"புத்தகம் படிக்கிறதைவிட எப்படிப் பட்ட புத்தகங்களைப் படிக்கிறோம்ங்கிற தும் ரொம்ப முக்கியம்."

"பேய்க்கதைகள் படிக்கிறது ஒண்ணும் தப்பான விஷயமில்லை ப்ரியா. பேய்க் கதைகளைப் படிக்கும்போது த்ரில் லான அனுபவம் கிடைக்குது. படிக்கும் போதே நமது கற்பனை சிறகடித்துப் பறக்கும்.."

"புத்தகத்தைப் படித்தால் அதி லிருந்து ஏதாவது ஒரு நல்ல விஷயத் தைக் கத்துக்கணும். புத்தகம் நமது நல்ல தோழன். நல்ல புத்தகங்களைப் படிக்க, படிக்க நாம் பக்குவமடைவோம்" என்றாள் ப்ரியா.

"நல்ல புத்தகங்களை நானும் தேடிப் படிச்சிட்டுதான் இருக்கேன். பேய்க் கதைகளில் கூட நல்லது ஜெயிக்கும். கெட்டது அழியும்ங்கிற மெசேஜ் இருக்கு ப்ரியா. என்னைப் பொறுத்தவரை இந்த மாதிரி பேய்க்கதைகள், மாயாஜால கதைகள் போன்றவற்றையும் படிக் கணும்னு தான் சொல்வேன். எல்லாத் துலயும் ஒரே மாதிரியான மெசேஜை எதிர்பார்க்கக் கூடாது. பொழுது போக் குக்காகவும் ஜாலிக்காகவும் படிக்கிற தில் தப்பில்லை. பேய்க் கதைகளைப் படிச்சிட்டு, அதை உண்மைன்னு நினைச்சு பயந்து நடுங்கறது தான் தப்பு" என்று விவேக் மூச்சு விடாமல் பேசி முடித்தான்.

"சரி, எனக்கு இது பிடிக்காது. உன்னை நான் படிக்கக் கூடாதுன்னு சொல்ல மாட்டேன்" - ப்ரியா.

"நீ சொன்னாலும் நான் கேட்கப் போறதில்லை. சீக்கிரம் படிச்சு முடிச் சிட்டு, டென்னிஸ் பிராக்டீஸ் போகணும். நீ கிளம்பு" என்றபடி பேய்க் கதையில் மூழ்கினான விவேக்.

- தம்பிப் பயல்

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். எழுதி அனுப்புங்கள்.



புதையல்

பாலு, குடுமிநாதன், டில்லிபாபு குழுவினர் ஏறிய கட்டுமரம் கடலுக்குள் இறங்கி, சீரான வேகத்தில் நகரத் தொடங்கியபோது மணி சரியாக இரவு 9.30.

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு குணம். ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதம். பாலுவுக்கு உடம்பு மட்டுமா பெரிசு? மனசும்தான் பெரிசு! நீயே சொல்லு. அவனுக்குத்தானே, இந்தப் பன்றித்தீவு மர்மத்தைக் கண்டுபிடிச்சி சமூக விரோதிகளை அடையாளம் காட்டி, பிடிச்சிக் குடுக்கணும்னு தோணியிருக்கு? நானும்தான் பன்றித்தீவுக்கு அடிக்கடி போறவன். அங்க சிலபேர் புதையல் பத்திப் பேசிக்கறதையும் கேட்டிருக்கேன். ஆனா இன்னிய வரைக்கும் அதை ஆராயணும்னெல்லாம் எனக்குத் தோணலையே. பாலுவுக்குத்தானே அந்த யோசனை வந்தது? குண்டா இருந்தா என்ன? குண்டுக்கு தைரியமும் ஜாஸ்தியாத்தானே இருக்கு?'' என்றான் டில்லிபாபு.

''அது சரிதாண்டா. நம்மால அவங்களைப் பிடிக்க முடியும்னு நினைக்கறே?'' என்று சந்தேகமுடன் கேட்டான் குடுமி.

''தெரியலை. ஆனா நம்ம நோக்கம் நல்ல நோக்கம். திட்டமும் தெளிவாத்தான் இருக்கு. நல்லதுதான் நினைச்சிக் கிளம்பியிருக்கோம். கடவுள் நம்ம பக்கம் கண்டிப்பா இருப்பார்டா'' என்றான் பாலு.

''நாளைக்கு வீட்டுக்குப்



தீவு

பா.ராகவன்

போனா எங்கம்மா என்ன கேப்பாங்கன்னு பயமா இருக்குடா'' என்றான் குடுமி, திடீரென்று.


''ஏண்டா?''

''ஒருவேளை நாம க்ரூப் ஸ்டடி பண்ணப் போகலை. இப்படி கடலுக்குத்தான் போயிருந்தோம்னு தெரிஞ் சிடிச்சின்னா?''

''கவலையே படாத. நாம வெற்றி அடைஞ்சாத்தான் நாம பன்றித் தீவுக்குப் போன விஷயம் தெரியும். இல்லாட்டி, க்ரூப் ஸ்டடி பண்ணமாதிரிதான்'' என்று கண்ணடித்தான் பாலு.

திடீரென்று சந்தேகம் வந்தவனாக டில்லிபாபுவிடம், ''டேய்! கரெக்டா காலைல ஆறு மணிக்கு வீட்டுல இருக்கணும். அதுக்கேத்தாப்

6



பல கிளம்பிடணும் அங்கேருந்து. ஞாப கம் இருக்கில்ல?'' என்றான் பாலு.

''அதெல்லாம் வந்துடலாம்டா. அவங்க ப்ளான் பண்ணியிருக்கிற டயம் என்ன? சரியா நடுராத்திரி வருவாங்கன்னுதானே சொன்னே? அப்பலேருந்து கணக்கு வெச்சிக்கிட்டாக்கூட ரெண்டு மணிக்குள்ள நமக்கு விஷயம் தெரிஞ்சிடும். முழுக்க தெரிஞ்சிக்கிட்டு மூணு மணிக்குக் கிளம்பினாக் கூட நாலு மணிக்குள்ள கரைக்கு வந்துடலாம். டோண்ட் ஒரி'' என்று தைரியம் கொடுத்தான் டில்லி பாபு.

கடலில் அலை மிகவும் குறைவாகத்தான் இருந்தது. காற்றும் மிக மென்மையாகவே வீசிக் கொண்டிருந்தது. பொதுவாக அமாவாசையன்று கடலில் அலை மிகவும் ஓங்கித் தணியும் என்று பாலு படித்திருக்கிறான். அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் அலைகளின் உக்கிரம் மிகவும் அதிகமாகத்தான் இருக்கும் என்று டில்லிபாபுவும் அதை ஆமோதித்திருந்தான். கொஞ்சம் உதறலுடன் தான் அவன் கட்டுமரத்தில் ஏறினான். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக அன்றைக்குக் கடலின் இரைச்சலேகூட மிகவும் குறைந்திருப்பதாக டில்லிபாபு

சொன்னான்.

"அமாவாசை அன்னிக்குக் கட்டுமரத்துல போறதை எங்க ஆட்களே பலர் விரும்பமாட்டாங்க. அலை ரொம்ப உசரமா வரும். அதுமட்டுமில்ல. கடல் கொந்தளிப்புங்கறது கொஞ்சம் பேஜாரான விஷயம். கட்டுமரம் தூக்கித் தூக்கிப் போடும். பேலன்ஸ் சரியா கிடைக்காது. படகுன்னாக் கூடப் பரவால்ல. கட்டுமரம் தள்றது ரொம்பக் கஷ்டம்" என்று அவன் சொல்லியிருந்தான்.

"இப்பல்லாம் கடலை யாரும் மதிக்கறது கிடையாது. எல்லா கம்பெனிகளோட கழிவு நீரையும் ஆறு மாதிரி கடலை நோக்கித்தான் திறந்துவிடறாங்க. எல்லாம் வெறும் கெமிக்கல்ஸ். மீன்கள் பாவம் என்ன செய்யும்? வருஷக் கணக்கா கெமிக்கல்ஸ் வந்து தண்ணில கலந்துகிட்டே இருந்தா அதுங்க எப்படி உயிர்வாழ முடியும்? அதான், இடத்தை மாத்திக்கிட்டு வேறு பக்கம் போயிடுதுங்க" என்றான் டில்லி.

"சே" என்றான் பாலு. "கடல் நீர் மாசுபடுதல்னு பேப்பர்ல பார்ப்பேண்டா. இதான் விஷயமா? ரொம்பத் தப்பாச்சே. நம்ம கவர்ன்மெண்ட் ஏதாவது செய்யக்கூடாதா?" என்றான் குடுமிநாதன்.

"போடா... கவர்ன்மெண்ட் என்ன செய்யணும்? நம்ம கம்பெனின்னா நமக்குத் தானே அக்கறை இருக்கணும். எங்கப்பா அடிக்கடி சொல்லுவார். கம்பெனிக் கழிவுகளைக் கடலுக்கு அனுப்பறதுக்கு முன்னாடி ஓரளவாவது சுத்திகரிச்சிட்டு அனுப்பணுமாம். அவங்க கம்பெனில அப்படித்தான் செய்யறாங்களாம்" என்றான் பாலு.

பேசிக் கொண்டிருந்தாலும் கட்டுமரம் செலுத்துவதில் கண்ணாக இருந்த டில்லி பாபு, இப்போது கட்டுமரம் போய்க் கொண்டிருந்த திசையை மெல்லத் திருப்பத் தொடங்கினான்.

"அவ்ளோதாண்டா. இந்த இடத்துல தெற்கு நோக்கித் திரும்பினா, கண்ணை மூடிக்கிட்டு ஓட்டிடலாம். சரியா ஒன்றரை கிலோ மீட்டர் இங்கேருந்து. எங்க மீனவர்கள் கணக்குல சொல்லணும்னா முக்கால் மைல்" என்று சொன்னான்.

"ஒரு காம்பஸ் கூட இல்லாம எப்படிடா கரெக்டா திசை தெரிஞ்சி ஓட்டறே?" என்றான் பாலு.

"பழக்கம்தான். ஒரு விஷயம் தெரியுமா? தரையில புதுசா ஒரு ஊருக்குப் போய் தெரு எதுன்னு தேடறதைவிட, கடல்ல திசை பார்த்து, நாம போகவேண்டிய இடத்தைக் கண்டுபிடிக்கறது சுலபம். தண்ணிலயே அடையாளம் உண்டு. தண்ணியோட நிறம், அலை எழும்பற வேகம், நீர் ஆழம் இதெல்லாமே அடையாளங்கள்தான். கொஞ்சம் அனுபவம் உள்ள மீனவர்கள் காத்து வீசற வேகத்தை வெச்சே எங்க இருக்கோம் இப்பன்னு சொல்லுவாங்க" என்று சொன்னான்.

"ஓ" என்றான் பாலு.

"இந்தப் பயணம் வெற்றிகரமா முடிஞ்சா கண்டிப்பா நான் நீச்சல் கத்துப்பேண்டா" என்றான் பாலு.

"கண்டிப்பா உடம்பைக் குறைப்பேன்னு சொல்லு முதல்ல!" என்றான் குடுமி.

மூவரும் மனம் விட்டுச் சிரித்தார்கள்.

பன்றித்தீவை அவர்கள் அடையும்வரை எந்தப் பிரச்னையும் வரவில்லை. டில்லி பாபு மிகத் திறமையாகக் கட்டுமரத்தைச் செலுத்தி, சரியாகப் பத்து ஐந்துக்கு பன்றித்தீவின் கரையை நெருங்கிவிட்டான். "வந்துடுச்சிடா" என்று ரகசியமாக அறிவிக்கவும் செய்தான்.

அவர்கள் உடனே பரபரப்பானார்கள்.

"தோபாரு. இனிமே உரக்கப் பேசக் கூடாது. ராத்திரி வேளைல சுவருக்குக் கூடக் காது உண்டுன்னு எங்கம்மா சொல்லுவாங்க. இந்தத் தீவுல ஒண்ணு ரெண்டு ஆள் நடமாட்டம் மட்டும்தான்

'Happy Birthday to you'
என்ற பாட்டுதான் அமெரிக்காவில் அதிகமாகப் பாடப்படுகிறது.

உண்டுன்னு நாம நம்பறோம். அவங்க கண்ணுல நாம படக்கூடாதுங்கறதுதான் நம்ம முதல் லட்சியம். கவனமா இறங்கி நைஸா காட்டுக்குள்ள போயிடணும்'' என்றான் பாலு.

கட்டுமரம் கரையைத் தொடுவதற்குப் பதினைந்து அடி தூரம் இருக்கும்போதே டில்லிபாபு தொப்பென்று அதிலிருந்து நீரில் குதித்தான். ஆழம் அதிகமில்லாத கடல் அது. பாலுவும் குடுமியும் கட்டு மரத்திலேயே இருக்க, ''குதிங்கடா, குதிங்கடா'' என்று குரல் கொடுத்தான்.

''ஏண்டா?''

''டேய்! கரை வரைக்கும் உன்னை இது இழுத்துட்டுப் போகாது. மண்ணுல மோதிடும். இங்க குதிச்சி, நாமதான் இதை இழுத்துட்டுப் போகணும்'' என்றான் டில்லி.

வேறு வழியில்லாமல் அவர்களும் தொப் தொப்பென்று நீரில் குதித்தார்கள். டில்லி கவனமாக பாலு குதிக்கும்போதே அவன் சட்டை காலரைப் பிடித்துக் கொண்டான்.

''குண்டா, கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க. இங்க நீ மூழ்க முடியாது. ஆனாலும் ஆழம்தான். கவனமா கட்டுமரத்தைத் தள்ளிக்கிட்டே நடந்து வா' என்றான் டில்லி.

மூச்சு வாங்க அவர்கள் கட்டுமரத்தைத் தள்ளிக் கொண்டே நடந்து கரைக்கு வந்து அந்த மரத்தை ஒரு ஓரமாகக் கவிழ்த்துப் போட்டார்கள். பாலுவுக்கு மிகவும் மூச்சு வாங்கியது.

''என்னடா இது! ரொம்ப பேஜார் வேலையா இருக்கே'' என்றான் அலுத்துக் கொண்டு.

''ம்... சரிதான். பத்தடி நடக்க முடியலியா உன்னால? பத்து நாள் பட்டினி போடு, சரியாயிடும்'' என்றபடியே மற்ற இரு வரும் சட்டைகளைக் கழற்றிப் பிழிய ஆரம்பித்தார்கள்.

''இனிமேல்தாண்டா நாம ஜாக்கிரதையா இருக்கணும். யாரும் உரக்கப் பேசாதீங்க. சட்டை கொஞ்சம் காய்ஞ்சதும் கிளம்பிடலாம். அதுவரைக்கும் மண்ணுலயே படுத்திருங்க'' என்றான் டில்லி.

மூவரும் அமைதியாக மண்ணில் படுத்தார்கள். வானில் சிறு வெளிச்சம் கூட இல்லை. ஒரு நட்சத்திரம்கூடத் தென்படவில்லை. டில்லி எப்படித்தான் அத்தனை துல்லியமாக கட்டுமரத்தைச் செலுத்தினானோ என்று பாலுவுக்கு வியப்பாயிருந்தது.

மனதுக்குள் அவன் நினைத்துக் கொண்டான். ஒரு லட்சியத்துடன் அவன் அந்தத் தீவுக்கு வந்திருக்கிறான். யார் அந்த சமூக விரோதிகள்? அவர்கள் என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள்? என்ன புதையலை எடுக்கப் போகிறார்கள்? எத்தனை பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? இதையெல்லாம் கவனமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதுதான் முதல் வேலை. அவர்களை எப்படி கடற்படை அதிகாரிகளிடம் பிடித்துக் கொடுப்பது என்பது அடுத்த வேலை.

தெளிவான நோக்கம். பொதுநல நோக்கமும் கூட. ஆகவே கடவுள் கண்டிப்பாகத் தன் பக்கம்தான் இருப்பார் என்று அவன் தீர்மானமாக நம்பினான்.

மூவரும் மிக அமைதியாக, ஒரு சொல் கூடப் பேசாமல் அந்தப் பரந்த மணல் வெளியில் சட்டையைக் கழற்றிவிட்டுப் படுத்திருந்தார்கள். கடற்காற்றின் மிக மெல்லிய ஓசையும் அலைகளின் ஓசையும் தவிர வேறு ஒரு சத்தமும் இல்லை.


பத்து நிமிடங்கள் கழிந்திருக்கும். ''கிளம்பலாமாடா?'' என்று பாலு கேட்டான். சட்டை காய்ந்துவிட்டதா என்று தலைமாட்டில் தொட்டுப் பார்க்கக் கழுத்தைத் திருப்பிப் பின்னால் பார்த்தான்; அதிர்ந்தான்!

(தொடரும்)



பத்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்!





விடைகள் :
1. நாய் மீதுள்ள கறுப்பு வட்டம், 2. பெண் வாத்தின் கண், 3. ஆண் வாத்தின் சட்டை, 4. பூ, 5. கள்ளி, 6. மலை, 7. பெண் வாத்தின் பாவாடை, 8. ஆண் வாத்தின் தொப்பி, 9. நாயின் கால், 10. மேகம்



சூரிய கிரகணம் பார்க்கலாமா?

அன்புள்ள ஜக்கு...





● ஆர்.ராஜேஷ், பெரியகுளம்

? சூரிய கிரகணத்தைப் பார்க்கலாமா ஜக்கு? நீ பார்த்திருக்கிறாயா?

! சூரிய கிரகணம் என்பது இயற்கையின் அற்புத நிகழ்வு. சூரிய கிரகணத்தின் போது நேரடியாக அக்காட்சியைப் பார்த்தால் பாதிப்பு வரும் என்ற செய்தி எங்கும் நிலவி வருகிறது. இதற்கு அறிவியல் ஆதாரம் எதுவும் இல்லை. என்றாலும் கண்களைக் காத்துக் கொள்வது அவசியம். சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்கு என விசேஷமான ஃபில்டர் கண்ணாடிகள் விற்கப்படுகின்றன. அதை மாட்டிக் கொண்டு கிரகணத்தைக் கண்டு களிக்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த சூரிய கிரகணத்தை மொட்டை மாடியில் நின்று ஃபில்டர் கண்ணாடி அணிந்து பார்த்திருக்கிறேன். அந்த அழகான காட்சியை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது ராஜேஷ். அனுபவித்து பார்த்தால்தான் உணர முடியும்.

● ப. ராம்கி, அறந்தாங்கி

? ஆங்கில கோகுலம் ரூ.8/-, தமிழ் கோகுலம் ரூ.6/-, ஏன் இந்த வித்தியாசம் ஜக்கு?

! பத்திரிகையின் விலையை ஏற்றினால்தான் வருத்தப்படுவார்கள். உங்கள் கவலை ஆச்சர்யமாக இருக்கிறது ராம்கி!

● எம். வினோத், சங்கரன்கோவில்

? யமுனை நதிக்கரையில் தாஜ்மஹால் இருப்பது போல கூவம் நதிக்கரையில் உன் அலுவலகம் உள்ளதாக என் நண்பன் கூறுகிறானே... உண்மையா ஜக்கு?

! சென்னையில் அடையாறு, கூவம் நதிகள் ஒரு காலத்தில் சுத்தமான நதிகளாக இருந்தன. மனிதனுடைய அலட்சியத்தால் இன்று அசுத்தம் அடைந்துவிட்டன. உங்கள் நண்பன் சொன்னது போல் கோகுலம் அலுவலகம் நதிக்கு அருகில்தான் இருக்கிறது. ஆனால் கூவம் நதி அல்ல; அடையாறு நதி.




● வீ.கலா, இடைப்பாடி

? வேதாளம், பூதாளம் கதைகள் சிறுவர்களுக்கு அறிவு புகட்டவா, அச்சுறுத்தவா ஜக்கு?

! பொதுவாக இப்படிப்பட்ட கதைகளில் நல்லது வெற்றி பெறும்; கெட்டது அழியும் என்ற நீதி கண்டிப்பாக இருக்கும். இக் கதைகளில் கற்பனை வளம் அதிகம் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. வேதாளத்தை யாரும் பார்த்திருக்க முடியாது. அந்த மாதிரி கதைகளைக் கேட்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உருவம் மனதில் தோன்றும். கற்பனை சக்தி விரிவடையும்.



• ஃபில்டர் கண்ணாடி



தாகம் எடுப்பது

ஹலோ சுகமா?

● கா. நவீன்குமார், கிருஷ்ணகிரி

? நமக்குத் தாகம் எடுப்பது எப்படி?

! ரத்தத்திலும் உடல் திசுக்களிலும் உள்ள நீரின் அளவு மற்றும் சோடியம், பொட்டாசியம் போன்ற உப்புகளின் அளவு எப்போதும் சரியான அளவில் இருக்க வேண்டும். சில காரணங்களால் ரத்தத்தில் இந்த அளவுகள் குறையும்போது, தனக்குத் தேவைப்படும் நீரையும் உப்பையும் திசுக்களிலிருந்து ரத்தம் எடுத்துக் கொள்ளும். அப்போது திசுக்களில் நீரும் உப்பும் குறைந்து விடும். இந்தச் செய்தியை மூளை தெரிந்து கொள்ளும். உடனே மூளையில் உள்ள தாகம் மையம் செய்தியை நரம்புகள் மூலம் தொண்டைக்கு அனுப்பி அங்குள்ள தசைகளைச் சுருங்கச் செய்யும். இந்தச் சுருக்கத்தினால் தொண்டை யில் வறட்சி ஏற்படுகிறது. இதைத் தான் தாகமாக நாம் உணர்கிறோம்.



● கு.வே. தினகரன், திருச்சிராப்பள்ளி

? குழந்தைகளுக்குக் குளிர்பானங்களைக் கொடுக்கலாமா? அவற்றால் உடலுக்கு அதிக சக்தி கிடைக்குமா டாக்டர்?

! குளிர்பானங்களைக் குடித்தால் சில கலோரிகள் சக்தி கிடைக்கும் என்பது உண்மைதான். அதற்காக அவற்றைக் குடிப்பது நல்லதல்ல. குளிர்பானங்களால் நமக்குக் கிடைக்கும் நன்மையைவிட கெடுதல்கள் அதிகம். தினமும் சமச்சீரான உணவைச் சாப்பிடும் குழந்தைக்குக் குளிர்பானங்கள் தேவையில்லை. மேலும், குழந்தைகள் குளிர்பானங்கள் குடிக்கும் பழக்கத்தைப் பெற்றோர்கள் ஊக்குவிக்கக் கூடாது. அதிலும் குழந்தைக்குப் பசி எடுக்கின்ற நேரத்தில் குளிர்பானங்களைக் குடித்துவிட்டால் பசி குறைந்துவிடும். பிறகு உணவைச் சாப்பிடப் பிடிக்காது. இதனால் உடலுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து குறைந்துவிடும். குழந்தை மெலிந்துவிடும். இது ஒருபுறமிருக்க, சில குழந்தைகள் நேரப்படி உணவையும் சாப்பிடுவார்கள்; இடைவேளை நேரங்களில் குளிர்பானங்களையும் குடிப்பார்கள். இதனால் கலோரிகள் அதிகரித்து, உடல் பருத்துவிடும். இப்படியும் நேரக் கூடாது. இதுவும் ஆபத்துதான்.

● வே. கண்ணன் மகேஷ், கோயம்புத்தூர்

? பல்லில் அடிபட்டு பல் வெளியில் வந்துவிட்டால் அதை மீண்டும் பழைய இடத்தில் பொருத்த முடியுமா, டாக்டர்?

! விபத்து காரணமாக பல்லில் அடிபட்டு பல் முழுவதும் வெளியில் வந்துவிட்டால் அந்தப் பல்லை பழையபடி பொருத்த முடியும். வெளியில் வந்த பல்லை உப்பு நீரில் - அதாவது 200 மி.லி. சுத்தமான தண்ணீரில் ஒரு சிட்டிகை சமையல் உப்பைப் போட்டுக் கலக்கிக் கொள்ள வேண்டும். அல்லது பாலில் போட்டு பல் மருத்துவரிடம் உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் பல்லைப் பொருத்த முடியும். அதே நேரத்தில் பல்ஈறு நோய் காரணமாக வெளியில் வந்த பல்லை அப்படி பொருத்த இயலாது.

● நா. கோபால்சாமி, சாத்தூர்

? பார்வையைப் பாதுகாக்க உங்கள் ஆலோசனைகள் என்ன, டாக்டர்?

ஏன்?



! கண்ணில் கோளாறு வரும்வரை காத்திராமல், ஆண்டுக்கு ஒருமுறை கண் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. கண்ணில் கோளாறு உண்டாகும்போது உடனடியாகக் கண் மருத்துவரைப் பார்த்து ஆலோசனை பெற வேண்டியது முக்கியம். கண் கோளாறுகளுக்கு சுய மருத்துவம் செய்யக் கூடாது. நல்ல பார்வைக்குப் போதிய வெளிச்சம் தேவை. ஆகையால் குறைந்த வெளிச்சத்தில் படிப்பதோ, வேலை பார்ப்பதோ கூடாது. அழுக்கான கைகளால் கண்களைக் கசக்கக் கூடாது. சூரிய வெளிச்சத்தை நேரடியாகப் பார்க்கக் கூடாது. வேதித் திரவங்கள் மற்றும் திராவகங்கள் உள்ள புட்டிகளைத் திறக்கும்போது அவை முகத்தில் படாமலிருக்கக் கவனம் தேவை. இரு சக்கர வாகனங்களை ஓட்டுவோர் கண்களில் தூசு, பூச்சிகள் போன்றவை விழாதிருக்க பாதுகாப்புக் கண்ணாடிகள் அணிந்து கொண்டால் நல்லது. வைட்டமின் ஏ சத்து பார்வையைக் காக்க உதவும். எனவே, சிறு வயதிலிருந்தே வைட்டமின் ஏ சத்து நிறைந்த காரட், பப்பாளி, பால், வெண்ணெய், மீன், முட்டை, கீரைகள், மாம்பழம் போன்றவற்றைச் சாப்பிட வேண்டும்.



டாக்டர் கு.கணேசன்

புதிர் இங்கே! விடை கீழே!

1. ரத்தம் உறைவதற்கு உதவும் அணுக்கள் எவை?
அ. சிவப்பணுக்கள்
ஆ. வெள்ளணுக்கள்
இ. தட்டணுக்கள்

2. தயிரின் புளிப்புச் சுவைக்குக் காரணம் எது?
அ. லாக்டிக் அமிலம்
ஆ. அசிட்டிக் அமிலம்
இ. அமினோ அமிலம்


3. காசநோயைக் கண்டு பிடித்தவர் யார்?
அ. ராபர்ட் காக்
ஆ. அலெக்ஸாண்டர் ஃபிளமிங்
இ. ரோனால்டு ராஸ்

4. உடலில் உள்ள நரம்புகளில் மிகவும் நீளமான நரம்பு எது?
அ. காது நரம்பு
ஆ. சியாட்டிக் நரம்பு
இ. நாக்கு நரம்பு

5. இயல்பாகவே நம் உடலில் பாக்டீரியாக்கள் அதிகமாக உள்ள இடம் எது?
அ. வாய்
ஆ. சிறுகுடல்
இ. பெருங்குடல்


விடை இங்கே!
1. இ 2. ஆ 3. அ 4. ஆ
5. இ

ஆசையால் ஆபத்து!



சஞ்சை, அரண்மனை தோட்டக்காரர். ஒரு நாள்-
ஆஹா! இன்று நிறைய மலர்கள் தோட்டத்தில் பூத்திருக் கின்றன!
அப்போது -
என்ன சத்தம்?
ஆ... மான்!
மறுநாளும் மான் வந்தது.
என்னைப் பார்த்த தும் இந்த ஓட்டம் ஓடுகிறதே!
நாட்கள் சென்றன.
இப்பொழு தெல்லாம் என் னைப் பார்த்து பயப்படுவ தில்லையே.


ஒரு நாள் அரசரை சந்தித்தார் சஞ்சை.
சஞ்சை, தோட்டத்தில் ஏதாவது புதிய செய்தி உண்டா?
இல்லை மன்னா.
சஞ்சைக்கு மான் நினைவுக்கு வந்தது.
அரசே, நம தோட்டத்துக்கு தினமும் மான ஒன்று வருகிறது.
அப்படியா?
அதைப் பிடித்து என்னிடம் தர முடியுமா?
முடியும். கொஞ்சம் தேன் வேண்டும்.
மறுநாள் -
புற்களின் மேல் தேனை தெளிக்கலாம்.
அதோ மான் வந்தாச்சு.
ஆஹா! என்ன இனிப்பு!
இனிப்பான புற்களைச் சுவைத்த மான் வேறு எங்கும் செல்லாமல் அங்கேயே புற்களை மேய்ந்தது.
மான் மாட்டிடும்.
மறுநாள் சஞ்சை தேன் தடவிய புற்களை கையில் எடுத்தபடி வந்தார்.


மான் புற்களை நாடி வந்தது.
நினைத்த படியே நடக்குது.
பிறகு -
புல்லை நாடி என் பின்னாலே வருது.
சஞ்சை அரண்மனைக்குள் நுழைந்தார். மானும் பின் தொடர்ந்தது.
ஐயோ! மாட்டிக் கொண்டேனே!
அடுத்த நிமிடம் கதவு சாத்தப் பட்டது.
மான் பயத்துடன் நிற்கும்போது அரசர் வந்தார்.
ஐயோ பாவம்!
நான் ஒன்றும் செய்ய மாட்டேன்.
© JINGLE BELL CREATIONS
ஆனால் உன்னிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.
எதற்கும் ஆசைப்படக் கூடாது. ஆசைப்பட்டால் ஆபத்து என்பதை உன் மூலம் அறிந்து கொண்டேன்.
அரசர் கதவைத் திறந்ததும் மான் ஓடியது.

ஆசிரியரும் மகிழ்வார்; எங்களையும் மகிழ்விப்பார்!

என் ஆசிரியர்

மாணவர்களிடம் அன்பாகவும், பாரபட்சமின்றி எல்லோரிடமும் பாசமாகப் பழகும் ஆசிரியரை மிகவும் பிடிக்கும்.

அப்படிப்பட்ட ஆசிரியர்கள்தான் எங்களுக்கு அமைந்தார்கள். பத்தாம் வகுப்பில், கணிதப் பாடம் எடுத்த ராபர்ட் ஆசிரியரை என்னால் மறக்கவே இயலாது. எங்களுக்கு என்ன சந்தேகமென்றாலும் பொறுமையாக நாங்கள் புரிந்து கொள்ளும் வரை சொல்லித் தருவார். எங்கள் ஆசானாகவும், குடும்பத்தில் ஒருவராகவும், எங்கள் நண்பராகவும் அவரைப் பாவிப்போம். நல்ல வழிகாட்டுதலையும் குறிக்கோளையும் எண்ணி ஒவ்வொருவரும் முன்னேற வேண்டும் என்று கூறுவார்.

தமிழ் வகுப்பெடுத்த குமுதம் ஆசிரியை, நல்ல அம்மாவாகவும் ஆசானாகவும் என்னால் கருத முடிந்தது. அதுமட்டுமல்லாமல் அறிவியல் வகுப்பெடுத்த உமா மகேஸ்வரி ஆசிரியை மற்றும் ஆங்கிலம், சமூக அறிவியல் இரண்டு பாடமும் நடத்தும் எங்கள் வகுப்பாசிரியரான சண்முகம், காலையில் வகுப்புக்கு வந்தவுடன் நல்ல அறிவுரைகளைக் கூறிவிட்டுத்தான் பாடம் நடத்துவார். பெரியோரை மதிக்கவும், யாரிடமும் மனம் நோகாமல் பேச வேண்டும் எனவும் கூறுவார். அவர் கூறிய அக் கருத்துகளை இன்றும் கடைப்பிடித்து வருகிறேன். வாழ்நாள் முழுதும் அக் கருத்துகளை ஏற்று நடப்பேன்.

- லக்ஷ்மி கலைவாணி, குள்ளஞ்சாவடி

சுதா ஆசிரியரை எனக்கு மிகவும் பிடிக்கும். பாடங்களை ஆங்கிலத்தில் நடத்தினாலும் அழகாக தமிழிலும் அர்த்தம் சொல்வார். இது எல்லோருக்கும் எளிதில் புரியும். யாருக்காவது உடல் நலமில்லை என்றால் உடனே நன்றாக கவனித்துக் கொள்வார். ஆசிரியர்கள் தினத்தன்று எங்களில் ஒருவராகி பாட்டு, புதிர், ஜோக்ஸ் என சொல்லி அவரும் மகிழ்வார்; எங்களையும் மகிழ்விப்பார். அவரின் அக் கறையால் நான் 90% மதிப்பெண்களைப் பெற்று வருகிறேன்.

- வி. மனோ ரஞ்சிதா, நான்காம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

சில குழந்தைகளிடம் கேட்பார்கள் உனக்கு எந்த ஆசிரியர் பிடிக்கும் என்று! அது போல என்னைக்



கேட்டால் நான் சொல்வது என் உயிரியல் ஆசிரியர் வி.செல்வராஜ் அவர்களைத்தான். அவர் பல நூறு மைல்கள் கடந்து வந்து எங்கள் பள்ளியில் பணிபுரிபவர். எனினும் விடுமுறை நாட்களில்கூட சிறப்பு வகுப்புகள் வைத்து அனைவரும் தேர்ச்சி பெற வேண்டும் என்று நினைப்பவர். தேர்வு என்றால் எங்களைவிட அதிக பயபக்தியோடு இருப்பவர் அவர்தான்! அவருக்குப் பிடிக்காத விஷயம் ஒன்று உள்ளது. பொய் சொன்னால் அவருக்குப் பிடிக்காது. அவரிடம் எங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு மிகவும் பிடித்தது இதுதான். நாங்கள் இந்த ஆசிரியரை பெற்றதில் மிகவும் புண்ணியம் செய்து உள்ளோம்.

- வே. சுபஸ்ரீ, பதினோராம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, நல்லூர்

வண்ண வண்ணப் பூக்கள்!




வேறு வேறு வண்ணம் மின்ன
நூறு பூக்கள் மலருமே
ஊறும் தேனைக் கண்டு வண்டு
உண்டு கீதம் பாடுமே!

ஒளி விழுந்த பொழுது பூவில்
இதழ் விரிந்து திறக்குமே
குளிர் மிகுந்த பனி விழுந்து
சிறிய பொட்டு வைக்குமே!

கூந்தல் தன்னில் சூடி னாலும்
குப்பை மேட்டில் எறியினும்
சாந்தம் பொங்கும் புன் சிரிப்பை
சிந்தும் பூக்கள் யாவுமே.


சின்ன நாரில் பின்னும்போது
சேரும் நாரில் வாசமே
வண்ணப் பூவின் பண்பைக் கற்று
வாழ வேண்டும் நாமுமே!


சி.விநாயகமூர்த்தி



குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்





இடமிருந்து வலம் :

1. அர்த்தசாஸ்திரம் எழுதியவர் (5)
4. மரங்களில் ஒன்று (2)
7. பிராணிகள், பறவைகளின் வாழிடம் (3)
10. கிரிக்கெட் விளையாட இது அவசியம் (3)
11. ராமனின் பிள்ளைகளில் ஒருவர் (2)
12. ________ வெட்ட, பூதம் கிளம்பியதாக ஒரு பழமொழி உண்டு (3)

வலமிருந்து இடம் :

2. நாய் ________ காக்கும் (3)
5. கூறு என்பதை இப்படியும் சொல்லலாம் (3)
8. வீடு (3)
14. பாலைவனக் கப்பல் (5)

மேலிருந்து கீழ் :


1. பாண்டவர்களுக்கும் ________ களுக்கும் போர் மூண்டது (4)
2. நாம் நினைத்த ________ நடக்க வேண்டும் (4)
8. தண்டயை ________ (4)
9. நாரதர் ________ நன்மையில் முடியும் (4)

கீழிருந்து மேல் :

3. புத்தகம் (2)
6. கடவுள் மேல் பக்தி கொண்டவர் (4)
7. மண் வகைகளில் ஒன்று (4)
12. சூரியனுக்கு அருகில் இருப்பது புதன் ________ (4)
14. சிலந்தி வீட்டில் கூடு கட்டுவதால் இது உருவாகும் (4)

- பி. வள்ளி, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக்கோட்டை

விடை 64ஆம் பக்கம்



தான



கௌண்டின்ய மகரிஷிக்கு சீலாவைத் திருமணம் முடித்தார் சுமந்து முனிவர். மருமகனை மிகவும் துச்சமாய் நடத்தினாள் சிற்றன்னை. அதனால் மாமனாரிடம் விடை பெற்றுப் புறப்பட்டார் கௌண்டின்யர்.

இருவரும் வழி நடக்கையில் ஒரு நதிக் கரையில் சில பெண்கள் ஒரே மாதிரி சிவப்புப் புடைவை அணிந்து பூஜை செய்வதைப் பார்த்தாள். கௌண்டின்யர் களைப்பினால் உறங்கிக் கொண்டிருந்தார்.

சீலா நதிக்கரைக்குச் சென்று "இதென்ன பூஜை?" என விசாரித்தாள். ஒருத்தி "இது அனந்த விரதம். யமுனையையும், அனந்த பத்மநாபனையும் ஆராதிக்கும் நோன்பு. இதை ஆராதிப்பதால் எல்லா பாக்கியங்களும் பெறலாம்" எனக் கூறி அவளுக்கும் ஒரு சரடை வலது கையில் கட்டி தாம்பூலமும் பிரசாதமும் கொடுத்தாள். நோன்பு கடைப் பிடிக்கும் முறையையும் கூறினாள்.

கணவரிடம் விரதம் பற்றிக் கூறி நோன்புக் கயிற்றைக் காண்பித்தாள். மகரிஷி அதைப் பொருட்படுத்தவில்லை!

அந்தி சாயும் போது நகர எல்லையை அடைந்தனர். எங்கே தங்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது ஊர் எல்லையிலுள்ள காளி கோயிலில் இருவர் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவர்களை அணுகிக் கேட்டார் முனிவர்.

அப்போது மேகங்கள் கூடி மழை பெய்யத் தொடங்கியது. அதில் ஒருவர் "தாங்கள் யார்?" என வினவினார்.



மகிமை!

ஆர்.பொன்னம்மாள்



''என்னைக் கௌண்டின்ய ரிஷி என்பர். சுமந்து முனிவரின் மகளான இவள் பெயர் சீலா. என் மனைவி'' என்று அறிமுகம் செய்துகொண்டார் மகரிஷி.

''எங்கள் குலகுரு நோய்ப் படுக்கையில் கிடக்கிறார். நாட்டில் மழையில்லாததால் யாக கர்மாதிகள் நடத்த நல்ல குருவைத் தேடிக் கொண்டிருந்தோம்! தாங்கள் இந்த மண்ணில் காலடி வைத்ததுமே மழை பெய்கிறது! வருணனுடைய ஆசியோடு உங்களை ஏற்கிறோம். மன்னா! இனி நம் கவலை தீர்ந்தது'' என மகிழ்ச்சியோடு கூறியவர் அவர்களுடன் அரண்மனையை அடைந்தார். மாறு வேடம் பூண்டு நகர் சோதனைக்கு வந்திருந்த வேந்தனும் ஆனந்தமாக இவர்களை அங்கீகரித்தான்.

அப்புறமென்ன? அவர்களுக்கு ராஜோபசாரம் தான்! பால் கறக்க மாடுகளும், அதைப் பராமரிக்க பணியாட்களும் கூட வந்தார்களென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

எல்லாம் அனந்தவிரதக் கயிற்றின் மகிமை என பூரித்தாள் சீலா. வேத பாடசாலைக்கும் கௌண்டின்யரே ஆசிரியராக இருந்ததால் வருமானம் இரட்டிப்பாயிற்று.

அடுத்த வருஷம் அனந்த விரதநாள். பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்தாள் சீலா. உணவருந்த வந்த கௌண்டின்யர், ''இதென்ன பூஜை?'' என்று கேட்டார்.

''மறந்து விட்டீர்களா? போன ஆண்டு நோன்புச் சரடு கட்டிக் கொண்டு பிரசாதம் சாப்பிட்டதற்கே இத்தனை அதிர்ஷ்டம்

வந்தது. நன்றி மறக்கலாமா? இன்று அனந்த விரதமாயிற்றே'' என்றாள் சீலா.

''அப்படியானால் நான் கற்ற வேத, வேதாங்கங்கள், சாஸ்திரம், புராணம் இதெல்லாம் நாம் முன்னுக்கு வரக் காரணமில்லை! இந்த அழுக்குக் கயிறுதான் காரணம் என்கிறாயா?'' என ஆக்ரோஷமாகக் கேட்டவர் நோன்புக் கயிற்றைப் பற்றி இழுத்தார். நைந்த கயிறு அறுந்து அவர் கையோடு வந்தது.

அதை ஔபாசனப் பானையில் வீசினார். ஔபாசனம் என்பது வீட்டில் ஒரு பானையில் தீ எரிந்து கொண்டிருக்கும். வேதியர்கள் தினமும் அதில் அக்னிஹோத்திரம் என்ற மந்திரமுறையை நடத்துவர். பானையிலிட்ட நூல் சரடு கருகியது. பதறிப் போன சீலா அதை எடுத்துப் பால் கிண்ணத்தில் போட்டாள். தீப்பற்றியதைப் பாலில் போட்டால்தான் மறுபடி உபயோகிக்கலாம்.

ஆனால் சரடு பயன்படுத்த முடியாதபடி துண்டு துண்டாகிவிட்டது. சீலாவின் கண்களிலிருந்து நீர் பெருகியது.

''அபசாரம் செய்து விட்டீர்களே! மாட்டின் மடியில் பால் பெருகியிருந்தாலும் அதைக் கறக்கும் கைகளில் உள்ள சக்திதான் தெய்வம். மந்திர சக்தி தங்களிடமிருந்தாலும் தேவையறிந்து உங்களைச் சேர்த்துவிட்டவர் பகவான். மழையாகப் பொழிந்து நம்பிக்கையூட்டவில்லையா?'' என வருந்தினாள்.

அதேசமயம் ஒரு சிஷ்யன் ஓடி வந்து, ''குருநாதா! எதிரிப் படைகள் நாட்டை முற்றுகையிட்டிருக்கின்றன. பகைவர்கள் யாக குண்டத்தில் நீர் ஊற்றி அழிக்கிறார்கள்'' என்று கதி கலங்கக் கூறினான்.

கௌண்டின்யருக்குத் திக்கென்றது! பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்வது எதிரிகளின் பழக்கமானதால் கௌண்டின்யரும் மாடுகளை இழந்தார். கோட்டைக் கதவு உடைக்கப்பட்டு பகைவரின் சேனை உள்ளே புகுந்தது. மன்னர் சுரங்கப்பாதை வழியாகத் தப்பிவிட்டார்.

கௌண்டின்யரும் சீலாவோடு யாத்ரீகராய் பயணப்பட்டார். ''சீலா! பெண் என்று உன் பேச்சை அலட்சியம் செய்தேன். என் அகம்பாவம்தான் அழிவுக்கு வித்திட்டது! யானை பெரிய பலசாலியாயிருக்கலாம்! குளவி சிறியதானாலும் தும்பிக்கைக்குள் புகுந்தால் யானையின் வலிமை பூஜ்யமாகிவிடும். கடவுளின் கருணை இல்லாவிடில் எதுவும் சிறக்காது என்பதைப் புரிந்து கொள்ள இத்தனை பெரிய விலை கொடுத்தேன்''. இப்படியெல்லாம் புலம்பிய கணவரை இதமாகப் பேசித் தேற்றினாள் சீலா.

வழியில் ஒரு பெரிய மாமரம். மரம் கொள்ளாதபடி பழங்கள். மகரிஷி பசியாயிருக்கிறதென்று பறித்தார். சீலா நறுக்கினாள். ''சே! கையெல்லாம் ஊறும் புழுக்கள்'' அருவறுப்போடு வீசி எறிந்தாள். மற்றொரு பழத்தை நறுக்கினாள் அதுவும் அப்படியே! அடுத்தடுத்து எல்லாம் அப்படியே இருக்கவும் இருவரும் திகைத்தனர். மரத்திடம் காரணம் கேட்டார் முனிவர்.

அவருக்குத் தாவரங்கள், பறவைகள், விலங்குகள் அவ்வளவு ஏன், கடல் அலைகளின் பாஷை கூடத் தெரியும்.

மாமரம் ''மரமாய்ப் பிறந்து காய்த்து பழுத்து அழுகி விழுகிறேன். எவருக்கும் பயன்படுவதில்லை. அதன் காரணத்தை அனந்தனிடம் கேளுங்கள்'' என்றது.

மறுபடி பயணத்தைத் தொடர்ந்தனர்.

சீலாவுக்குத் தாகம் நாக்கை வறட்டியது. தெளிந்த நீரையுடைய இரட்டைத் தடாகங்களைக் கண்டனர். ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நீர் போக்குவரத்தும் அமைந்திருந்தது. தண்ணீர் குடிக்க குளத்தில் இறங்கினாள் சீலா.

''தாயே! அதைக் குடிக்காதீர்கள். அதில்

சராசரியாக கணினி உபயோகிப்பாளர்கள் ஒரு நிமிடத்திற்கு ஏழு முறை கண் சிமிட்டுகிறார்கள்.

நஞ்சு கலந்திருக்கிறது. இதை அருந்திய வர்கள் கை, கால், நாக்கு இழுத்துக் கொண்டு அவஸ்தைப் படுகிறார்கள்'' என்று அவசரமாகத் தடுத்தான் ஒருவன்.

குளம் மகரிஷியிடம் தன் பாவத்துக்கான பிராயசித்தத்தை அனந்தனிடம் கேட்டு வரும்படி கெஞ்சியது.

தொடர்ந்து நடந்த முனிவர் மயங்கி விழுந்தார். அப்போது பரந்தாமன் ஒரு வயோதிகர் வடிவில் வந்து தன் கமண்டல நீரைத் தெளித்து "அனந்தனைப் பார்க்கலாம், வா'' என அழைத்துச் சென்றார்.

தனியான இடத்தில் கிழவர் மறைய பெருமாள் காட்சி அளித்தார். தம்பதிகள் திருமாலை வணங்கி துதித்தனர். பிறகு மாமரம், தடாகம் இவற்றின் தோஷங்களுக்கான காரணத்தையும், பரிகாரத்தையும் சொல்லி அருள வேண்டும் என்று பிரார்த்தித்தார் கௌண்டின்யர்.

"பக்தா! எனக்கு எப்போது நல்ல வாழ்வு கிடைக்கும் என்று சுயநலமாய் கேட்காமல், பிறர் வாழ வழி கேட்ட உன் பொது நலம் எனக்குப் பிடித்தமானது. சென்ற பிறவியில் மாமரம் வேத சாஸ்திர பண்டிதனாய் இருந்தது. தான் கற்றதை எவருக்குமே சொல்லித் தராததால் அதற்கு இந் நிலை வந்தது. தான் கற்ற அஷ்டமா சக்திகளையும், மருத்துவ ரகசியங்களையும் எவருக்காவது மனமுவந்து போதித்தால் அதன் தோஷம் நீங்கும்.

"இரண்டு தடாகங்களும் இரு சகோதரிகள். அவர்களே ஒருவருக்கொருவர் தானம் கொடுத்துக் கொண்டனர். அன்னிய மனிதர்களுக்காக ஒரு காசும் ஈந்ததில்லை. அதனால் வந்த தோஷம் இது. நடுவில் உள்ள பாதையை அடைத்து அங்கே தோண்டினால் ஒரு தங்கப் புதையல் கிடைக்கும். அதைக் கொண்டு அன்ன சத்திரம் கட்டி யாத்ரீகர்களுக்கு அன்ன தானம் செய்து வந்தால் இரண்டு பொய்கைகளின் தோஷமும் நீங்கி விடும்.''



பகவான் மறைந்த பிறகு வெகு நேரம் கழித்தே தம்பதிகள் சுய உணர்வு பெற்றனர். கௌண்டின்யர் குளங்களிடம் சென்று அதன் நிவர்த்தியைக் கூற, "முனிவரே! அந்தப் புண்ணிய காரியத்தைத் தாங்களே செய்து சாப விமோசனமளிக்க வேண்டும்'' என வேண்டின.

முனிவர் ஊர் மக்களிடம் இதைக் கூறி அவர்கள் உதவியுடன் நடுப் பகுதியை அடைத்து கரையை உயர்த்தியபின் தோண்ட தங்கப் புதையல் கிடைத்தது. ஜனங்கள் ஆரவாரமிட்டனர்.


அன்ன சத்திரம் கட்ட குளத்திலிருந்தே நீர் எடுத்தார். ஏழைகளுக்கு நிலம் வாங்கிக் கொடுத்தார். தடாகங்களின் நீரைக் குடித்தவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை! அது கண்டு மக்களும் அதைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

மாமரத்திடம் வந்த ரிஷி அனந்தன் கூறியதைத் தெரிவித்தார். "மகரிஷி! காரணம் தெரிந்த பிறகு காத்திருக்க முடியுமா? உங்களை விடச் சிறந்தவராக யார் இருக்க முடியும்?'' எனக் கூறி தான் கற்ற வித்தையெல்லாம் போதித்தது.

கௌண்டின்யரும் வேத பாடசாலை அமைத்து மாணவர்களுக்குத் தான் கற்றதை போதித்தார். அக்கம் பக்கம் ஊர்க்காரர்கள் அவருக்கு ஆசிரமம் கட்டிக் கொடுத்து தேவையான எல்லாவற்றையும் தந்து மரியாதையுடன் நடத்தினர்.

மாமரத்தில் இப்போதெல்லாம் ஒரு பழம்கூட இல்லை! பறவைகளும் வழிப் போக்கர்களும் சூறையாடி விடுகின்றனர். சீலாவுக்கும் ஒரே சந்தோஷம்! அனந்த விரதத்தை விடாமல் கடைபிடித்து ஆனந்தமாயிருந்தாள்.

இரவில் பூந்தோட்டம்! பகலில் வெறுந்தோட்டம்!



விடுகதைப் பக்கம்

I. 1) இரண்டாவது எழுத்து உலகத்தில் உண்டு; தேசத்தில் இல்லை. மூன்றாவது எழுத்து அம்மாவில் உண்டு; அப்பாவில் இல்லை. நான்காவது எழுத்து பண்டிதரில் உண்டு; புலவரில் இல்லை; ஐந்தாவது எழுத்து பஸ் வண்டியில் உண்டு; மின்சார வண்டியிலே இல்லை - அந்த அற்புதக் கடல்வீரனின் பெயரென்ன?

2) ஒன்றில்லாமல் உலகம் கெட்டது; ஒரு காய் இல்லாமல் மானம் போனது; ஒரு கல் இல்லாமல் ருசி போனது - அவை என்ன?

3) ஒகோ மரமே உயர்ந்த மரமே
ஒரு கொத்து வெற்றிலைக்கு
வக்கத்த மரமே - அது என்ன?

- எம். அலர்மேல் வள்ளி தாயார், பத்தாம் வகுப்பு, ஸ்ரீனிவாசராவ் மேல்நிலைப் பள்ளி, திருவையாறு

II. 1) ஒடுவான், ஒதுங்குவான், ஒற்றைக்காலில் நிற்பான் - அவன் யார்?

2) ஒரு கால் மனிதனுக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

3) ஒளியில் தொடர்ந்து இருளில் மறையும் - அது என்ன?

4) விதையில் கிடைக்காத எண்ணெய், செக்கில் எடுக்காத எண்ணெய் - அது என்ன?

5) வெளியே பச்சை, உள்ளே மஞ்சள், விதையோ கறுப்பு- அது என்ன?

- ஏ. முடியப்பன், நல்லூர்

III. 1) அன்றாடம் தீப்பிடிக்கும் அழியாத மாளிகையில் அறுசுவை விருந்து தயாரா கிறது - அது என்ன?

2) தரையில் இல்லாத குளம், யாருமே குளிக்காத குளம், சுற்றி சுவரால் மூடிய குளம் - அது என்ன?

3) தண்ணீரில் தள்ளாட்டம், தரைக்கு வந்தால் கல்லாட்டம் - அது என்ன?

4) தந்தையின் போர்வை மடிக்க முடியலே, தாயின் காசை எண்ண முடியலே - அது என்ன?

5) பொழுது போனால் பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறுந் தோட்டம் - அது என்ன?

- ச. அழகுவேல், பதினோராம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, கன்னிவாடி

IV. 1) அதிக சேலைகளை அடுக்கிக் கொள்வாள்; ஒன்றை எடுத்தாலும் கண்ணைக் கசக்க வைப்பாள் - அவள் யார்?

2) ஆயிரம் பேரால் செய்யப்பட்ட வேலை ஒருவரால் உடைக்கப்பட்டது - அது என்ன?

3) மூன்று கண் உடையவன், பூஜைக்கு உதவுபவன் - அவன் யார்?

- எஸ். அமீர்ஜான், அரும்பாக்கம்

விடைகள் :

I. 1) கொலம்பஸ் 2) மழை, பருத்தி, உப்பு 3) கள்ளி

II. 1) கதவு 2) மிளகாய் 3) நிழல், 4) மண்ணெண்ணெய் 5) பப்பாளி

III. 1) அடுப்பு 2) இளநீர் 3) படகு 4) வானம், விண்மீன் 5) வானம்

IV. 1) வெங்காயம் 2) தேன்கூடு 3) தேங்காய்

உழைப்பை நிறுத்தலாமா?

பிரபலங்களின் வாழ்வில்...

ஒற்றுமையாக...

வினோபாவேயை கல்லூரி மாணவர்கள் சிலர் சந்தித்தனர். அவர்களிடம் காகிதத் துண்டுகள் சிலவற்றைக் கொடுத்து இணைக்கச் சொன்னார். அதில் இந்தியாவின் வரைபடம் இருந்தது. எவ்வளவோ முயற்சித்தும் அவர்களால் இந்தியாவின் வரைபடத்தைச் சரியாக இணைக்க முடியவில்லை. அங்கு படிப்பறிவில்லாத இளைஞன் ஒருவன் அமர்ந்திருந்தான். வரைபடத்தைத் தான் இணைப்பதாக கூறி அவ்வாறு இணைத்தும் விட்டான். வினோபாவே அவனிடம் "எவ்வாறு சீக்கிரமாக இக் காரியத்தைச் செய்தாய்?" என்று கேட்டார். அவனோ "அத்துண்டுகளின் பின்புறம் மனிதனின் உருவப்படம் இருந்தது. அதை வைத்து இணைத்தேன்" என்றான். "இந்தியாவை மிகச் சிறந்த நாடாக உருவாக்க வேண்டுமானால் இந்தியர்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் அவ்வாறு உருவாக்க முடியும்" என்று வினோபாவே கல்லூரி மாணவர்களுக்கு விளக்கினார்.

- மியூரியல் உஷா,
மதுரை

* வினோபாவே



உழைப்பு...

விமானத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்கத் தொழிலதிபர் உலக மகா கோடீஸ்வரர் ராக்பெல்லரின் பக்கத்தில் அமர்ந்திருந்த நண்பர்..

"வயதான காலத்தில் இப்படி ஏன் அலைகிறீர்கள்? பெரிய அளவுக்கு வளர்ந்து விட்டீர்கள். இனி நீங்கள் சம்பாதிக்க வேண்டாம். உட்கார்ந்தே சாப்பிடலாம். எதற்காக உழைக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு ராக்பெல்லர்,


"எல்லாம் சரிதான். விமானத்தைக் கிளப்பி, வானத்துக்கு ஏற்றி, அதுவும் மென்மையாக பறந்து கொண்டிருக்கிறது. இனி எதற்கு இஞ்சின் ஓட வேண்டும், நிறுத்தி விடுவோமா?" என்று பதிலுரைத்தார்.

"ஐயோ வேண்டாம் சார். விழுந்து நொறுங்கி விடுவோம்" என்று நண்பர் பதைத்தபோது. "எந்திரத்தை நிறுத்துவது எப்படியோ அப்படித்தான் மனித எந்திரம் உழைப்பை நிறுத்துவது. விழுந்து நொறுங்கிவிட மாட்டோமா?" என்றார் ராக்பெல்லர்.

- ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார்பாளையம்



* சாக்ரடீஸ்



* ராக்பெல்லர்

கற்றுக் கொள்வேன்!

உலகப் புகழ் பெற்ற கிரேக்கத் தத்துவ மேதை சாக்ரடீஸ் மரண தண்ட

னைக் கைதியாக சிறையில் அடைக் கப்பட்டார். அந்தச் சிறையில் அவருடன் இன்னொரு கைதியும் அடைக்கப்பட்டிருந் தான். அவன் அந்தச் சமயத்தில் ஓர் அழகான பாடலைப் பாடினான். உடனே சாக்ரடீஸ் கைதியிடம் ஓடிச் சென்று அந்தப் பாடலை மீண்டும் ஒருமுறை பாடிக் காட்டுமாறு கோரினார். "மரண தண்டனை கைதியான உனக்கு சாகப் போகும் நேரத் தில் இது எதற்கு?" என்று ஏளனமாகக் கேட்டான் அந்தக் கைதி. அதற்குத் தத்துவ ஞானி, "சாவதற்குள் இன்னும் ஒரு புதிய விஷயத்தைக் கூடுதலாகத் தெரிந்து கொள்ளலாமே" என்றார் அமைதியுடன்.

- கே. எல். கந்தரூபி,
மேலகிருஷ்ணன்புதூர்

பணப் பெட்டி

ஒரு சமயம் இராஜாஜி தம் நண்பர் களுடன் கல்கத்தாவுக்குப் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவரது நண் பரின் பணப்பெட்டி ஓடும் ரயிலிலிருந்து தவறி வெளியே விழுந்துவிட்டது. ரயிலை உடனடியாக நிறுத்த அபாயச் சங்கிலி போன்ற வசதிகள் அப்பொழுதெல்லாம் கிடையாது. மற்ற எல்லோரும் பதறினார்கள். அடுத்த ரயில் நிலையத்தில் ரயில் நின்ற வுடன் அங்கிருந்த காவலர்களிடம் இங் கிருந்து 57ஆவது தந்திக் கம்பத்தில் பணப் பெட்டி விழுந்தது என்று கூறினார் இராஜாஜி. எதையும் கூர்மையாக கவனிப்பவர் இராஜாஜி. அதனால் பணம் எங்கே விழுந்தது என்பதை அவரால் சொல்ல முடிந்தது. பணப் பெட்டியும் கிடைத்தது.

- எஸ். கவிதா, விழுப்புரம்

படி.... படி....

நூல்கள் பதிப்புச் செய்தால் உடனே சைவத் திருமடங்களுக்கு நேரில் கொண்டு சென்று ஆதீன முதல்வர்களுக்கு சமர்ப்பிக்கும் பழக்கம் உ.வே.சாவிடம் இருந்தது. திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் காசிவாசி சாமிநாதத் தம்பிரானுக்கு நூல்கள் சமர்ப்பிக்க வந்தார்.

திருமடத்தின் காரியஸ்தர்கள் உ.வே.சா அவர்கள் மடத்துக்குள் நுழைகையில் படியிருக்கும் இடங்களிலெல்லாம் 'படி, படி' என்று சொல்லிக் கொண்டே வந்தார்கள். உ.வே.சா சுவாமிகளைச் சந்தித்தார். சுவாமிகள், இந்தத் தளர்ச்சியிலும் பதிப்பையும், படிப்பை யும் விடாமல் பணி புரியும் பாங்கைப் பாராட்டினார்.

உ.வே.சா "எல்லாம் தங் கள் திருமடத்தின் காரி யஸ்தர்களின் உத்தரவுப்படி தான்" என்றார். சுவாமிகள் ஒன்றும் புரியாமல் விளக் கம் கேட்டார். "இங்கு வரும்போதெல்லாம் காரியஸ்தர்கள் 'படி, படி' என்கிறார்கள். நானும் அதன்படியே நடக்கிறேன்" என்றார்!

- எஸ். துர்கா காத்யாயனி,
தூத்துக்குடி



குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 கொ	டி	ல்	ய	ச்	■	ல்	வ	2 கா
ர்	■	3 நா	■	த	■	ட	■	சி
வ	■	■	4 ஓ	ச்	■	ண்	■	ய
ச்	க	5 ப	■	6 ப	■	7 வ	ள	ம்
■	■	■	■	■	■	■	■	■
ம்	க	8 அ	■	9 க	■	10 ம	ட்	ட
க	■	க	■	11 ல	வ	■	■	ட
ர	■	ற்	■	க	■	ன்	■	ட்
12 கி	ண	று	■	ம்	க	13 ட	ட்	14 ஓ

**டால்மியாபுரம்
டால்மியா மேல்நிலைப்
பள்ளி ஸ்பெஷல்**



சாதனைகள் படைக்கும் பள்ளி!

டால்மியா மேல்நிலைப் பள்ளி டால்மியா நிறுவனத்தால் 1950ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளி என்னும் அரும்பாகத் தோன்றி, உயர்நிலைப் பள்ளி என்னும் மொட்டாக வளர்ந்து, 1978ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளி என்னும் மலராக மலர்ந்து மணம் பரப்பி வருகிறது. உறுதியான கட்டடங்கள், வசதியான வகுப்பறைகள், துறை தோறும் தனித்தனி ஆய்வகங்கள், ஏறத்தாழ பத்தாயிரம் நூல்களைக் கொண்ட நூலகம், பல்வேறு விளையாட்டுக் கருவிகளையும் விளையாட்டுத் திடல்களையும் கொண்ட உடற்கல்வித் துறை, நவீன கணிப்பொறி ஆய்வக மையம், கவினுறு கலையரங்கம் ஆகியவற்றைக் கொண்டு கல்விக் கலைக் கோயிலாகத் திகழ்கிறது.

மாணவர் இலக்கிய மன்றம், ஆங்கில மன்றம், அறிவியல் மன்றம், கணித மன்றம், சமூக அறிவியல் மன்றம், பள்ளிச்சிறார் நல மையம், பெற்றோர் ஆசிரியர் கழகம், மாணவர் கூட்டுறவு பண்டகசாலை, நாட்டு நலப் பணித் திட்டம், தேசிய மாணவர் படை, (வான் மற்றும் தரைப் பிரிவு) சாரண, சாரணியர் இயக்கம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், தேசிய பசுமைப் படை, இயற்கைக் கழகம், மாணவர் சிறு சேமிப்புத் திட்டம், சஞ்சயிகா திட்டம் ஆகியவை மாணவர் முன்னேற்றத்திற்காக இப்பள்ளியில் செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் இப்பள்ளி அரசுப் பொதுத் தேர்வுகளில் அளப்பரிய சாதனைகளைப் படைத்து வருகிறது. மாணவர்கள் கல்வி, விளையாட்டு, ஓவியம், பேச்சு, கட்டுரை, இசை, நடனம் முதலிய போட்டிகளில் பங்குபெற்று வட்ட, மாவட்ட, மாநில அளவிலும் வெற்றி பெற்று, பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

சாரண, சாரணியர் இயக்கத்தைச் சார்ந்த 11 மாணவ, மாணவியர் மாநில ஆளுநர் விருதுகளையும் 2 மாணவர்கள் குடியரசுத் தலை பர் விருதுகளையும் பெற்றுள்ளனர்.


சுற்றுப்புற ஊர்களில் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் மூலம் பொது மருத்துவ முகாம், கண் மருத்துவ முகாம் மற்றும் பல விழிப்புணர்வு பேரணிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பள்ளியின் முதுகலை ஆசிரியர் பி.ஜான்லூயிஸ் அகில உலக 'memory champianship' போட்டியில் 'Grand master' பட்டம் பெற்றதோடு 'Limca book of records - 2004' என்ற சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளார்.

இப்பள்ளித் தாளாளர் ஆர்.சண்முகம் அவர்கள் பள்ளி வளர்ச்சியில் முழு கவனம் செலுத்துகிறார். ஆற்றல் மிகு தலைமையாசிரியர் ஆர். நடராசன் அவர்களின் வழி காட்டுதலோடு மிகச் சிறப்பாக சாதனைகள் படைத்து வருகிறது டால்மியா பள்ளி.

மகன் : அப்பா எது சரி? காவிரியா, காவேரியா?

அப்பா : அதுவே பிரச்னை. அதிலே நீ ஏன் பிரச்னை பண்ணறே?



நீதிபதி : ஒரு வீட்டில் இரண்டாவது முறையும் ஏன் திருடினாய்?

குற்றவாளி : 'நன்றி மீண்டும் வருக'ன்னு போட்டிருந்தது.

- இரா. உஷா, இரா. திவ்யா, பன்னிரெண்டாம் வகுப்பு

இலட்சங்கள் இல்லாமல் வாழ முடியும். இலட்சியங்கள் இல்லாமல் வாழ முடியாது.

- க. ராஜேஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு

உயர்வு

மழைத்துளி பட்டால்தான்
பூமி செழிக்கும்
மகரந்தம் பட்டால்தான்
மலர்கள் சிரிக்கும்
மனிதனே உன்
வியர்வைத்துளி
பட்டால்தான் உன்
வாழ்க்கை உயரும்!

- ஆர். பிரதாப், ஒன்பதாம் வகுப்பு

வசந்தம்

விழிகள் இரண்டிலும்
கனவை எழுது!
இதயம் முழுவதும்
இலட்சியம் எழுது!
உழைப்பில் என்றும்
உண்மை எழுது!
உன் உதடுகளில்
புன்னகை எழுது!
வாழ்க்கை உனக்கு
வசந்தம் எழுதும்!

- ந. கிருத்திகாதேவி, ஒன்பதாம் வகுப்பு

அளந்து பேசு; அதற்காக அளக்காதே; நினைத்து பேசு; அதற்காக நினைத்ததையெல்லாம் பேசாதே!




நோயின்றி வாழ்வோம்!

நூறாண்டு வாழ
பழங்களைச் சாப்பிடு
நோயின்றி வாழ
கீரைகள் சாப்பிடு
கைகளை என்றும்
கழுவியே சாப்பிடு
கவலைகள் மறந்திட
கடமையாய் உழைத்திடு
காலை எழுந்ததும்
தண்ணீர் பருகிடு
காய்கறி வகைகளை
விரும்பியே சாப்பிடு
மிதூண் தவிர்த்து
மிதமாய்ச் சாப்பிடு
வாழ்நாள் முழுதும்
கவனமாய்ச் சாப்பிடு!

- ஆர். கோகிலா, ஏழாம் வகுப்பு

டால்மியாபுரம் டால்மியா மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல்



கடிகார முள்

பதிமூன்றாம் நூற்றாண்டில் செய்த கடிகாரங்களுக்கு ஒரே முள்தான் உண்டு. 1670க்குப் பிறகுதான் நமிட முள் வைக்கப்பட்டது.

ரேடியம்

ரேடியம் ஒளிக்கதிர்கள் எத்தகைய கடினமான பொருள்களையும் துளைக்கக் கூடியவை. மேலும் அது நீரைப் பிரிக்கும். கண்ணாடியை நிறம் உடையதாக்கும். வளையும் ரப்பரை ஒடியும் பொருளாக்கும். வைரங்களைப் பலநிற ஒளி வீசச் செய்யும்.

- என். சித்ரா, பதினோராம் வகுப்பு



நீங்கள் எந்த வகை?

கோபமாய்ப் பேசினால்
குணத்தை இழப்பாய்!
அதிகமாய்ப் பேசினால்
அமைதியை இழப்பாய்!
வெட்டியாய்ப் பேசினால்
வேளை(ல)யை இழப்பாய்!
வேகமாய்ப் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய்!
ஆணவமாய்ப் பேசினால்
அன்பை இழப்பாய்!
அவதூறாகப் பேசினால்
இறையருளை இழப்பாய்
அநாகரீகமாய்ப் பேசினால்
ஆதரவை இழப்பாய்!

- என்.மகாலக்ஷ்மி,
ஏழாம் வகுப்பு

எஸ்.பிரபு,
பன்னிரெண்டாம் வகுப்பு,



பி.எம்.தமிழ்ச்செல்வன்,
பன்னிரெண்டாம் வகுப்பு,





டி.வினோத்குமார்,
பன்னிரெண்டாம் வகுப்பு,

டி.நந்தகுமார்,
பன்னிரெண்டாம் வகுப்பு,



டால்மியாபுரம் டால்மியா மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல்

கே.செல்வகும
பன்னிரெண்டா
வகுப்பு,




ஆர்.வின்சென்ட் பால் ராஜ்,
ஒன்பதாம் வகுப்பு,



சி.சுதா,
ஆறாம் வகுப்பு,



எஸ்.சுகன்யா,
பதினோராம் வகுப்பு,





ஆறே வயதில் அபூர்வ சாதனை!


வாகை சூட வயது தடையில்லை

கராத்தே வீர விளையாட்டில் உச்சக் கட்டமான கறுப்பு பெல்ட் வாங்குவதற்கு ஒன்பது நிலைகளைத் தாண்டி வர வேண்டும். முதலில் வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம், வயலட் (இதில் இரண்டு நிலைகள்) பிரௌன் (இதில் மூன்று) பெல்ட் என்று தாண்டிய பிறகே கறுப்பு பெல்ட் கிடைக்கும். இதைப் பெறுவதற்கு குறைந்த பட்சம் நான்கு வருடம் பயிற்சி தேவை. ஆனால் ஆறு வயதிலேயே கறுப்பு பெல்ட் வாங்கி அபூர்வ சாதனையைச் செய்திருக்கிறான் ரோஹித் ராம் சுந்தர். இப்போது பி.எஸ். ஸீனியர் ஸெகண்டரி பள்ளியில் இரண்டாம் வகுப்பு மாணவனான ரோஹித்துக்கு அவன் நண்பர்கள் வைத்துள்ள பெயர் 'லிட்டில் மாஸ்டர்'. இது எப்படி சாத்தியமாயிற்று?



ரோஹித்தின் அப்பா ஏ.ஆர். சுந்தர் ஒரு கராத்தே மாஸ்டர். பல பள்ளிகளில் சிறுவர், சிறுமியருக்கும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கும் கராத்தே சொல்லித் தருகிறார். ரோஹித் ஒரு வயது குழந்தையாக இருக்கும்போதே பயிற்சி கொடுக்கச் செல்லும் அப்பாவோடு வண்டியில் தொற்றிக் கொண்டு 'நானும் வருவேன்' என்று அடம் பிடித்துச் செல்வானாம். ''ஒரு வயதிலேயே அவனுக்கு கராத்தே சீருடை அணிவித்து விட்டோம். இரண்டு வயதில் ஸ்டெப்ஸ் மற்றும் அசைவுகளைக் கற்றுக் கொண்டு விட்டான். மூன்றரை வயதில் போட்டிகளில் கலந்து கொள்ளத் துவங்கி விட்டான்'' என்று சொல்கிறார் சுந்தர்.

கராத்தே வீர விளையாட்டு பல ஸ்டைல்களின் அடிப்படையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஷோடகாய், ஜூடகாய், இஷின்ரியூ என்று பல ஸ்டைல்கள். இவற்றில் ரோஹித் கற்றுக் கொண்டது இஷின்ரியூ ஸ்டைல்தான். ''உலகத்திலேயே மிகச் சிறந்த கராத்தே மாஸ்டராக வர வேண்டும்'' என்கிறான் ரோஹித். அவனுக்குப் பிடித்தது கராத்தே பயிற்சி என்றாலும் பிடிக்காதது காலையில் நான்கு மணிக்கே ஜாகிங் போவது. ''அதுதான் ரொம்பக் கஷ்டமா இருக்கு'' என்கிறான் ரோஹித். கராத்தே தவிர தப்லா, வாய்ப்பாட்டு



என்று பல திறமைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறான்.

முதன் முதலாக அகில இந்தியப் போட்டியில் ரோஹித் கலந்து கொண்டது 2002ம் வருடம். ஒன்பது வயதுக்குள் உள்ள பிரிவில் நான்கு வயது ரோஹித்தைச் சேர்த்துவிட்டார்கள். ''எல்லாரும் என்னை விட பெரிய பசங்க. ஆனாலும் நான் செய்த கதா (அசைவுகளின் தொகுப்பு) எல்லோராலும் பாராட்டப்பட்டது'' என்று மழலை மாறாத குரலில் சொல்கிறான் ரோஹித். ஆனால் 2003ல் நடந்த சென்னை மாவட்ட கராத்தே போட்டியில் கலந்து கொண்டு எல்லோரையும் அசத்தி பரிசைத் தட்டிக் கொண்டு வந்திருக்கிறான். இதுபோன்ற அங்கீகரிக்கப்பட்ட போட்டிகளைத் தவிர தனிப்பட்ட நிறுவனங்கள், அமைப்புகள் நடத்திய போட்டிகளிலும் கலந்து கொண்டு பதக்கங்கள், கேடயங்கள் வாங்கியிருக்கிறான் ரோஹித்.

எல்.கே.ஜி. படிக்கும்போது ரோஹித் இரண்டு ஓடுகளை வைத்து ஒரே வெட்டில் இரண்டாக்குவானாம். இப்போது கை விரல்களின் மேல் மாருதி வேனை ஏற்றிக் காட்டுகிறான். இந்தச் சாதனை நிகழ்த்தக் காரணம் கராத்தே கற்றுத் தரும் அசாத்திய மன உறுதிதான். ''இன்று பள்ளிகளில் ஆயிரக் கணக்கான மாணவ, மாணவியர் கராத்தே கற்றுக் கொள்கிறார்கள். இதனால் ஆரோக்கியம் காப்பாற்றப்படுகிறது. ஒழுக்கம் வளர்கிறது. மூச்சுப் பயிற்சி சாத்தியமாகிறது. கவன சக்தி வளர்கிறது. ஞாபக சக்தி கூடுகிறது. பயம் நம்மை அறவே விட்டுப் போகிறது. நல்ல பழக்க வழக்கங்கள், குரு பக்தி ஆகியவை உருவாகும்'' என்கிறார் சுந்தர்.

கராத்தே போட்டிகளை வயதின் அடிப்படையில் நடத்தாமல் போட்டியாளரின் எடையின் அடிப்படையில் நடத்த இருக்கிறார்கள். இது போன்று நடந்தால் ரோஹித் போன்ற சிறுவர்கள் ஒத்த வயதினருடன் போட்டியிட்டு சாதனைகளைச் செய்ய முடியும். 'கராத்தே' என்றால் ஜப்பானிய மொழியில் 'வெறுங்கை' என்று பொருள். ஆயுதம் ஏதுமில்லாமல் எதிரிகளை வீழ்த்தும் யுத்திகளைக் கற்றுக் கொடுப்பது மட்டுமில்லாமல் இரும்புச் சங்கிலி, சூலாயுதம் போன்ற ஆயுதங்களுடனும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதிலும் சூலாயுதம் போன்ற ஆயுதத்தை வைத்துக் கொண்டு ரோஹித் செய்யும் சாகசங்கள் நம்மை பிரமிக்க வைக்கின்றன. அடுத்த ஒலிம்பிக்ஸில் கராத்தேயைச் சேர்க்க இருக்கிறார்களாம். ''எதிர்காலத்தில் இவனைத் தயார் செய்வது அந்த அடிப்படையில்தான்'' என்கிறார் அப்பா சுந்தர்.

- ப்ரியன்

படங்கள் : **மீடியா ராமு**

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஆகஸ்ட் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்களில் இருந்து ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை

1. தலைநகர் - மாலே
2. மொழி - திவிஹி
3. கரன்ஸி - ரூஃபியா
4. 2000
5. மீன் பிடித்தல்
6. யூகோஸ்லாவியா




பரிசு யாருக்கு?

1. சி. மதுமிதா, ஆறாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் ஆங்கிலோ இந்தியன் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி
2. ஏ.எஸ்.பானுமதி, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
3. ஷா. ஷப்ரீனா, நான்காம் வகுப்பு, இஸ்லாமிய மாதிரி பள்ளி, திருவிதான் கோடு, குமரி மாவட்டம்
4. ந. அஸ்வினி, மதுரை
5. ஜி.ஆனந்த் ரவிசேகர், புதுக்கோட்டை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

ஒரு முட்டையும் இருநூறு ரூபாயும்

கதை : ஸ்ரீரா. ரவிவர்மன், பெரம்பலூர்　　படம் : சேகர்



உண்மை

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை



எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவனான ரவி, வீட்டு விலங்குகளிடம் மிகுந்த அன்பு கொண்டவன். எந்த ஒரு சிறு உயிரினத்திற்கும் தீங்கு செய்ய மாட்டான். அவன் வீட்டில் அவன் மட்டும் சைவம். அசைவ உணவை அவன் ஒருபோதும் உண்ணுவதில்லை. ஒருநாள், பள்ளியில், மதிய உணவு இடைவேளையின்போது, ஒரு மரத்தடியில், ஏதோ யோசித்தபடி அமர்ந்திருந்தான் ரவி. அவனது முகம் சற்று கவலையுடன் காணப்பட்டது. இதைப் பார்த்த ரவியின் நண்பன் மூர்த்தி, ரவியருகே வந்து, "ஏண்டா, ரவி! ஒரு மாதிரியா இருக்க?" என்று கேட்டான்.

"அடுத்த மாசம் எங்க வீட்டுல, குல தெய்வத்துக்குப் பூஜை போட்டு, கெடா விருந்து வைக்கப் போறாங்கடா."

"ரொம்ப ஜாலியான விஷயம். இதுக்குப் போய் ஏண்டா கவலைப்படற?"

"அடப் போடா, எங்கப்பா அந்த விருந்துக்காக, நான் ஒரு வருஷமா வளர்த்த ஆட்ட வெட்டப் போறாராம்."

"பாவம் அந்த ஆடு."

"நானும் அம்மாவும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அப்பா கேட்கலே."

"கடையில கறி வாங்கச் சொன்னியா?"

"சொன்னேன் மூர்த்தி. கடையில கறி வாங்கினா பணம் அதிகமா செலவாகுமாம். அதனால நம்ம ஆட்டையே வெட்டி விருந்து வச்சிடலாம்ன்னு கண்டிப்பா சொல்லிட்டார்."

"ஆட்ட வெட்டப் போறத நினைச்சி தானே கவலைப்படற?"

"ஆமாம், மூர்த்தி."

"ரவி ஆட்ட எப்படியாச்சும் காப்பாத்திடலாம். நான் இப்ப இருந்தே யோசிக்கறேன். ஸ்கூல் முடிஞ்சி போறப்ப ஆட்ட காப்பாத்த, யோசனை ஏதாவது சொல்றேன்."

"சரி, மூர்த்தி."

மாலை பள்ளி முடிந்ததும், ரவியும் மூர்த்தியும் பேசியபடி வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். மூர்த்தி ரவியிடம் ஆட்டைக் காப்பாற்றும் திட்டத்தை எடுத்துக் கூறினான். சிறிது நேரத்தில்

அன்பு!

எம்.பி.ராஜேஷ்கன்னா
வி.மன்னார்குடி, சேலம் மாவட்டம்



இருவரும் தத்தம் வீடுகளைச் சென்றடைந்தனர்.

ரவி தினமும் பள்ளி முடிந்து வீடு திரும்பியதும் தன் வீட்டிலுள்ள ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு மலையடிவாரத்துக்குச் சென்று விடுவான். அங்கு அவன் ஆடு, மாடுகளை மேய்த்தபடியே படிப்பது வழக்கம். இன்றும் வழக்கம் போல் ஆட்டையும் இரு பசுக்களையும் ஓட்டிக் கொண்டு, பாடப் புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு, மலையடிவாரத்தை நோக்கிச் சென்றான். சிறிது நேரத்தில் மலையடிவாரத்தை அடைந்த ரவி, அங்கு மிதிவண்டியுடன் காத்திருந்த மூர்த்தியிடம் தனது ஆட்டை ஒப்படைத்தான்.

''நீ சொன்ன படியே, என் செல்ல ஆட்டை உன் கிட்ட கொடுத்திட்டேன், மூர்த்தி.''

''கவலைப் படாதே ரவி. உன் ஆடு பக்கத்தூர்ல இருக்கிற என் தாத்தா வீட்ல பத்திரமா இருக்கும்.''

''உங்க தாத்தா ஏதாச்சும் சொன்னாருன்னா?''

''நான் அவருக்கு ரொம்பச் செல்லம். நான் சொல்றதத்தான் கேட்பார். உங்க குல தெய்வ பூஜை முடிஞ்சவுடனே சொல்லு. நான் ஆட்ட கொண்டுவந்து உன்கிட்ட கொடுத்திடறேன்.''

''சரி, மூர்த்தி.''

''அப்ப நான் கிளம்பறேன் ரவி. பக்கத்தூர் போய்ச் சேர அரை மணி நேரம் ஆகும்'' எனக் கூறிய மூர்த்தி, தான் கொண்டு வந்த பட்டியில் ஆட்டைப் படுக்க வைக்க, அது அவனின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தது. ரவி ஆட்டை சமாதானம் செய்து, பட்டியில் படுக்க வைத்து, வழியனுப்பி வைத்தான்.

இரவு தொடங்கும் வேளையில் ரவி இரண்டு பசு மாடுகளோடு வீட்டை அடைந்தான். தன் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டான். எதிர்ப்பட்ட ரவியின் அம்மா, "ஆடு எங்கே?" என கேட்க, "நான் ஆடு, மாடுகளை ஒரு இடத்துல மேயவுட்டுட்டு தனியே உட்கார்ந்து படிச்சிகிட்டு இருந்தேம்மா. திடீர்னு திரும்பிப் பார்த்தா ஆட்டக் காணோம். நல்லா தேடிப் பாத்துட்டேன்மா. எங்க போச்சுன்னு தெரியல" என ரவி தயக்கத்துடன் கூறி, நடிக்க, அம்மா கோபமடைந்து திட்ட ஆரம்பித்தாள். சத்தம் கேட்டு அங்கு வந்த ரவியின் அப்பா விஷயம் அறிந்து, "இதுக்குப் போய் கவலைப்பட வேண்டாம். அது நம்ம ஆடு. எங்க போனாலும், திரும்பி நம்ம வீட்டுக்கே வந்துடும். அப்படி வரலைன்னா, காலையிலே தேடிக்கலாம்" என ஆறுதல் சொன்னார்.

மறுநாள் ஆடு வீடு திரும்பாததால், ரவியின் அப்பாவும் அம்மாவும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். நாள் முழுவதும் தேடியும் ஆடு கிடைக்கவில்லை.

அன்றிரவு, ரவி வீட்டினுள் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவனது மனம் ஆட்டைக் காப்பாற்றிவிட்ட சந்தோஷத்தில் இருந்தது. ரவியின் அம்மாவும் அப்பாவும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து ஆட்டைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

"என்னங்க ஆடு பக்கத்து ஊரு பக்கம் போயிருக்குமோ?"

"ஆடு அவ்ளோ தூரம் போயிருக்காது. எவனோ ஆட்ட திருடிகிட்டு போய்ட்டான். இந்நேரம் கறி சமைச்சி, தின்னு தூங்கிகிட்டிருப்பான். ஆட்டப் பத்தி இனிமே பேசாதே."

"ஆட்டப் பத்தி கவலைப்படலீங்க. சொந்தகாரங்களை விருந்துக்கு வரச் சொல்லிட்டோம். கறி சமைக்க... என்ன பண்றது...?"

"... கடைல கறி வாங்குன்னா பணம் அதிகம் செலவாகும். என்ன பண்ணலாம்...? ம்... நம்மகிட்ட கோழி இருக்கு. அடிச்சி கறி சமைச்சிடு."

"மூணு கோழிதாங்க அடிக்க முடியும்."

"ஏன்?"

"ரெண்டு கோழிங்க போனவாரம்தான் குஞ்சு பொறிச்சுது. தாய்க் கோழிய எப்படிங்க கொல்றது?"

"எனக்கு கோழியைவிட சொந்தகாரங்கதான் முக்கியம். அஞ்சு கோழியையும் அடிச்சிதான் கறி சமைக்குற. தெரியுதா?"

அப்பா கண்டிப்புடன் கூறிவிட்டு படுக்கைக்குச் சென்றார். இவர்கள் பேசியதைக் கேட்ட ரவியின் மனதில் குண்டு வெடித்தது போல் இருந்தது.

'ஆட்டைக் காப்பாத்தப் போய் இப்ப கோழிக்கு ஆபத்து வந்திடுச்சே. ம்... எப்படியாச்சும் அஞ்சு கோழியையும் காப்பாத்தியாகணும். நாளைக்கு விடிஞ்சவுடனே, மூர்த்திகிட்டே இதப்பத்தி பேசணும்' என முடிவெடுத்தான் ரவி.

> *அநேக மனிதர்களுக்கு 60 வயதில் சுவை அறியும் சக்தி பாதியாக குறைந்துவிடுகிறது.*
>
> ***- வெங்கட்ராகவன், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ரங்கா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திருச்சி***

மறுநாள் காலை, மூர்த்தி வீட்டுத் தோட்டத்தில் மூர்த்தியும் ரவியும் தனித்து அமர்ந்திருந்தனர். ரவி மூர்த்தியிடம், நேற்றிரவு தன் அப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டதை அப்படியே எடுத்துக் கூறினான்.

சிறிது நேரம் யோசித்த மூர்த்தி, பின் பேச ஆரம்பித்தான்.

"கோழியக் காப்பாத்திட்டோம்னா அடுத்து உங்கப்பா மாட்ட வெட்டி குழம்பு வச்சிடுவார். அதனால..."

"கோழி, மாடு ரெண்டையும் காப்பாத்திடலாமா?"


"ரெண்டையும் காப்பாத்தறது கஷ்டம். பேசாம கெடா விருந்தை சைவ விருந்தா மாத்தணும்."

''எப்படி?''

''இரு யோசிச்சி சொல்றேன்.'' சில நிமிடங்கள் அங்கு மௌனமாக கழிந்தது. அதன் பின் மூர்த்தி ரவியிடம், ''உங்க சொந்தக்காரங்க வீட்டுல போன் இருக்கா?'' என ஆவலாய் கேட்டான்.

''ஓ... இருக்கே'' என ரவி பதிலளிக்க, ''அப்ப நான் சொல்றபடி செய்'' எனக் கூறிய மூர்த்தி தான் யோசித்த திட்டத்தை விளக்கினான்.

அன்று மதியம், உணவு இடைவேளையின்போது, பள்ளிக்கு அருகே உள்ள பொதுதொலைபேசியில் ரவியும் மூர்த்தியும் இருந்தனர். ரவி தொலைபேசியில் எண்களைத் தட்ட, மறுமுனையில் -



''ஹலோ ஆறுமுகம் பேசறேன். நீங்க யாரு?''

''ஹலோ சித்தப்பா! நான் ரவி பேசறேன்.''

''அடடே, ரவியா? என்னடா திடீர்னு போன் பண்ணியிருக்க?''

''அடுத்த மாசம் எங்க வீட்டுல நடக்குற கெடா விருந்துல...''

''கண்டிப்பா குடும்பத்தோட வந்துடறேன் ரவி''

''அதில்ல சித்தப்பா, கெடா விருந்துல சின்ன சிக்கல்.''

''என்ன சிக்கல்?''

''எங்க ஊர் கசாப்பு கடையில, காக்கா கறி, நாய் எலும்பு இதையெல்லாம் ஆட்டுக்கறியோட கலந்து, கலப்படம் பண்ணி விக்கறாங்க சித்தப்பா!''

''அச்சச்சோ!''

''கலப்படம் பத்தி அப்பாகிட்ட சொன்னா, அவரு நம்ப மறுக்கிறாரு. கசாப்புக் கடைக்காரர் எங்கப்பாவுக்கு உயிர் நண்பராம். ரொம்ப நல்லவராம்.''

''உங்கப்பாகிட்ட ஆடு ஒண்ணு வளர்த்தீங்களே, அத வெட்டச் சொல்லு.''

''ஆடு, கோழியெல்லாம் இருக்கு சித்தப்பா. அத வெட்டி விருந்து வச்சிடலாம்னு அம்மாவும் நானும் எவ்ளோ சொல்லியும் அப்பா கேட்கல. அவர் நண்பரோட கசாப்புக்கடையில கறி வாங்குனா, ரொம்ப டேஸ்ட்டா இருக்கும்னு சொல்றார்.''

''என்ன பண்ணலாம்...? பேசாம கெடா விருந்துக்கு பதிலா, சாதாரண விருந்தே வச்சிடுனு உங்கப்பாகிட்ட சொல்லிடறேன்.''

''சரி. சித்தப்பா. ஆனா கலப்பட விஷயத்தைப்பத்தி பேசிடாதீங்க. அப்புறம் என்மேல அப்பா சந்தேகப்படுவாரு.''

''இல்ல, ரவி... நான் வேற மாதிரி பேசி சமாளிச்சுடறேன்.''

''சரி, சித்தப்பா. ரொம்ப நன்றி சித்தப்பா. போனை வச்சிடறேன். வீட்டுல எல்லோரையும் கேட்டதா சொல்லுங்க.''

அன்றிரவு எட்டு மணிக்கு மேல், ரவியின் சித்தப்பா, ரவியின் அப்பாவிற்கு போன் செய்தார்.

''ஹலோ! நான் ஆறுமுகம் பேசறேன்.''

''அட, தம்பி ஆறுமுகமா? என்ன விஷயம்?''

''அது வந்துண்ணா, வர மே மாசம் திருப்பதி போலாம்னு முடிவெடுத்திருக்கோம். கூட நம்ம தங்கச்சி வீட்டுக்காரங்களும் வர்றாங்க...''

''சரி. அப்ப நாங்களும் வர்றோம்.''

''கண்டிப்பா வாங்கண்ணே. ஒரு சின்ன கண்டிஷன். திருப்பதி போயிட்டு வர்ற வரைக்கும் சுத்தமாயிருக்கணும். முக்கியமா, கறி சாப்பிடக் கூடாது.''

''அப்ப கெடா விருந்து?''

''அது வேணாம். சைவ விருந்தா வச்சிருங்கண்ணே.''

''சரி. அப்படியே செய்யறேன். உங்க விருப்பமே என் விருப்பம்.''

கெடா விருந்து நின்ற மகிழ்ச்சியில் ரவி நிம்மதியாக உறங்கினான். ●

செப்டெம்பர் 5 - ஆசிரியர்கள் தினம். திண்டுக்கல் சீலப்பாடியில் உள்ள அக்ஷயா வித்யாலயா பள்ளி விழாக்கோலம் பூண்டிருந்தது. பல்வேறு வண்ணச் சீருடைகள் அணிந்த, 35 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர், பெற்றோர்கள் என ஆயிரம் பேர் குவிந்திருந்தனர். தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக 'யூத்



கார்னிவல்' என்ற நிகழ்ச்சி இந்தப் பள்ளியில் நடைபெற்று வருகிறது. திண்டுக்கல் ஃபோர்ட் ரோட்டரி கிளப், திண்டுக்கல் குயின் சிட்டி ரோட்டரி கிளப், அக்ஷயா வித்யாலயாவின் ஆலோசனை மையம் மற்றும் கோகுலம் சிறுவர் மாத இதழ் ஆகியவை இணைந்து இந்தாண்டு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.



காலை 9.30 மணிக்கு விழா ஆரம்பித்தது. பேச்சு, கட்டுரை, மாறுவேடம், க்விஸ், பாட்டு, நடனம், பூ அலங்காரம், ரங்கோலி உட்பட இன்னும் பல போட்டிகள் தனித்தனி இடங்களில் நடைபெற்றன.

மாறுவேடப் போட்டியில் 3, 4 வயது குழந்தைகள் பாரதியாகவும், கொங்கு நாட்டுப் பெண்மணியாகவும், காட்டுவாசியாகவும், கேரளத்து பெண் போலவும், ஔவையாராகவும் வந்து காண்போரைக் கவர்ந்திழுத்தனர்.

பரந்து விரிந்துள்ள மிகப் பெரிய இடத்தில் அக்ஷயா வித்யாலயா பள்ளி அமைந்துள்ளது. பதினாறு ஆண்டுகளாக 100% தேர்ச்சி பெற்று வருகிறது இப்பள்ளி. மற்ற பள்ளிகளில் இல்லாத சிறப்பம்சங்கள் நிறையவே உள்ளன. மான்கள், குரங்கு, முயல், வாத்து, கிளி என இன்னும் பல விலங்குகளும் பறவைகளும் அடங்கிய உயிரியல் பூங்கா உள்ளது. நீச்சல் குளம், துப்பாக்கி சுடுதல், ஸ்கேட்டிங், ஷட்டில் கோர்ட், பேஸ்கட் பால் போன்றவற்றில் பயிற்சியும் கொடுக்கப்படுகின்றன. இது தவிர யோகா, ஸ்போக்கன் இங்கிலீஷ், கராத்தே, சிலம்பம் போன்றவையும் கற்றுத் தரப்படுகின்றன. சிறந்த மாணவ - மாணவியரை சமுதாயத்துக்கு அளிக்கும் நோக்கத்தில் குறைந்த செலவில் பள்ளியின் தாளாளர் இஎன்.பழனிச்சாமி செயலாற்றி வருகிறார்.



இளமைத் திருவிழா!

குழந்தைகளை விட பெற்றோர்கள் மிகவும் டென்ஷனாக இருந்ததைப் பார்க்கும்போது சுவாரசியமாக இருந்தது.

மதிய உணவுக்குப் பின் நடன போட்டிகள் துவங்கின. இந்தப் போட்டியில் தான் அதிகமாக மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் எஸ்.முருகையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ''மாணவர்களுக்கு பெற்றோர்கள், முதல் ஆசிரியர்கள்; ஆசிரியர்கள், இரண்டாவது பெற்றோர்கள். எல்லோருக்கும் தகுதி இருக்கிறது. அந்தத் தகுதியை மேம்படுத்திக் கொள்கிறவர்களே வெற்றி பெறுகின்றனர்'' என்றார். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார்.











படங்கள் :
ஜெயச்சந்திரன்

ரோட்டரியின் மாவட்ட கவர்னர் எம். இளங்கோவன் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். தேசிய கீதத்துடன் விழா நிறைவுற்றது.

காலையிலிருந்து பங்கேற்றாலும் மாணவ, மாணவியரிடம் உற்சாகம், தன்னம்பிக்கை, விடா முயற்சி போன்றவை மாலை வரை சிறிதும் குறையவில்லை.

பரிசு வேட்டையில் எஸ்.எம்.பி.எம். பள்ளி முதல் இடத்திலும் எம்.எஸ்.பி., செயின்ட் ஜோசப், அக்ஷயா, ஸ்ரீ மகரிஷி வித்யா மந்திர் பள்ளிகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன.

இந்த நிகழ்ச்சியில் கோகுலமும் பங்கேற்க திண்டுக்கல் ஏஜெண்ட் ஜெயச்சந்திரன் பெரிதும் உதவினார்.

செய்தி நேரம்

இந்தியாவுக்குப் பெருமிதம்!

அமெரிக்காவில் வசிக்கும் இந்திய விஞ்ஞானி அருணி பட் நாகர். அதிக ஆர்வம், ஈடுபாடு, உழைப்பு ஆகியவற்றால் அருணி படிப்படியாக உயர்ந்தார். இவரது திறமையைப் பார்த்து அமெரிக்க அரசும் உதவியது. அருணி முக்கிய விஞ்ஞானிகளில் ஒருவரானார். அவர் கண்டுபிடித்ததில் 'காற்று மாசுபாட்டுக்கும் இருதயத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது' என்பது முக்கியமானது. கேன்சர் அல்லது ஆஸ்துமாவுக்கும் காற்று மாசுபாட்டுக்கும் உறவு உள்ளது என்பதையும் பல ஆய்வுகளின் மூலம் நிரூபித்தார். அமெரிக்க அரசு தற்போது அருணியின் ஆராய்ச்சிக்காக 32 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அமெரிக்க அரசிடம் இவ்வளவு பெரிய தொகை பெறும் முதல் இந்திய விஞ்ஞானி அருணிதான்.

ஆயுத விற்பனை

உலக அளவில் ஆயுத விற்பனை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சரிவைக் கண்டு வருகிறது. ஆனால் ஆசிய அளவில் ஆயுதங்கள் அதிகமாக வாங்கும் பட்டியலில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. ஆயுதங்கள் வாங்கிக் குவிப்பதில் மத்திய கிழக்கு நாடுகள் முன்னணியில் இருந்தன. அவற்றை தற்போது சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய ஆசிய நாடுகள் முந்திச் சென்றுள்ளன. ஆயுத விற்பனையில் அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. ஆயுதம் வாங்குவதில் ஐக்கிய எமிரேடு முதல் இடத்திலும், சீனா, எகிப்து, இந்தியா அடுத்தடுத்து இடம் பிடித்துள்ளன.

செல்லப் பிராணிகளுக்கு சட்டங்கள்


அமெரிக்கா மற்றும் பெரும்பாலான மேலை நாடுகளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களுக்கு சட்ட திட்டங்கள் உள்ளன. அதில் செல்லப் பிராணிகளைப் பொது இடங்களில் அழைத்துச் செல்லும்போது அதன் கழிவுகளை அவற்றின் உரிமையாளர்தான் சுத்தம் செய்ய வேண்டும். செய்யாதவர்கள் பெரிய தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டும். செல்லப் பிராணிகளைச் சங்கிலி கொண்டு கட்டி அழைத்துச் செல்ல வேண்டும். செல்லப் பிராணியோ, அதைக் கட்டியிருக்கும் சங்கிலியோ பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது. இப்படி நிறைய சட்டங்கள் அங்குள்ளன.



திராட்சைக் கொடி

வண்ணத் தூரிகை முடிவு

ஆறுதல் பரிசு :
கே.கே. சரவணக்குமார்,
பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, காரமடை



ஆறுதல் பரிசு :
கே.எஸ். மிதிலா,
ஏழாம் வகுப்பு,
ஸ்ரீஜெயேந்திரா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, திருச்சி




செப்டெம்பர் இதழில் 'திராட்சைக் கொடி' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



முதல் பரிசு :
பா. சாய் ஷங்கர்
ஏழாம் வகுப்பு, புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி, சென்னை



இரண்டாம் பரிசு :
து. தீப்தி திவ்யா,
ஏழாம் வகுப்பு, தேவி மெட்ரிக் மே.நி.பள்ளி, பழநி



மூன்றாம் பரிசு :
எஸ். ஸ்ரீவித்யா,
நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்



நன்மை தருவாள் துர்க்கை!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

